Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 108

திங்கட்கிழமை
14 மார்ச் 2022

மாசி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

## எரிபொருளின் விலை அதிகரிப்பு போதாதாம்

கொழும்பு, மார்ச் 14
ஒரு லீற்றர் டீசலின் விலையை இன்னும் 120 ரூபாவால் அதிகரிக்கவேண்டும்என இலங்கை பெற்றோலியக் 15

# இந்திய முதலீட்டாளர்கள் மீன்பிடியில் முதலீடு

## யாழில் வைத்து இந்தியத் தூதுவர் தெரிவிப்பு
## மன்னார் நிகழ்வு திடீர் நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 14
இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் முன்னின்று செயற்படுவோம். அதேபோல் எதிர்காலத்தில் இங்கு மீன்பிடித்துறையில் இந்திய முதலீட்டாளர்கள் முதலிடுவதற்கான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளோம். இதற்கு மீனவ சமூகத்தினர் ஆதரவு வழங்கவேண்டும் - இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே 15

## புலமைப்பரிசில் பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், மார்ச் 14
2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 11

# அள்ளிக் கொடுக்கிறது இந்தியா அடகு வைக்கிறது இலங்கை

- ஒரு பில்லியன் டொலர் கடன் அடுத்தவாரம்
- வடக்கு - கிழக்கு தாரைவார்ப்பு
- மன்னாரில் அதானி குழுமம் காற்றாலை
- சம்பூரில் மின்உற்பத்தி

யாழ்ப்பாணம், மார்ச் 14
இந்தியா விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை தயாராகியுள்ளதால், ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி அடுத்த வாரம் இலங்கைக்கு கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்தியாவுக்கு செல்வதற்கு முன்பதாக, இந்தியாவின் பொருளாதார நலன்சார் ஒப்பந்தங்கள் அனைத் 15

## கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலையின் கஜலக்ஸனுக்கு 198 புள்ளிகள்



யாழ்ப்பாணம், மார்ச் 14
2021தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் தமிழ்செல்வன் கஜலக்ஸன் 198 புள்ளிகளைப் பெற்றுள்ளார். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்றிரவு 9.55 மணிக்கு பரீட்சைகள் திணைக்கள உத்தியோகபூர்வ இணையத்தளங்களில் 12

# வடக்கில் இன்னும் 7,297 ஹெக்ரேயரை வனவளத்திணைக்களம் சுவீகரிக்கும்!

- ★ ஏற்கனவே 3 இலட்சத்து 62 ஆயிரம் ஹெக்ரேயர் சுவீகரிப்பு
- ★ ஆர்.ரி.ஐ. ஊடாக விவரங்கள் அம்பலம்
- ★ ஜனாதிபதியுடனான சந்திப்பில் கூட்டமைப்பு சுட்டிக்காட்டுமா?



To be Gazetted Forest

| District | Forest Name | Area (ha) |
|---|---|---|
| [illegible] | [illegible] | 594.86 |
| [illegible] | [illegible] | 706.03 |
| [illegible] | [illegible] | 217.67 |
| [illegible] | [illegible] | 175.04 |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | 3131.7 |
| [illegible] | [illegible] | 36.5 |
| [illegible] | [illegible] | 69.06 |
| [illegible] | [illegible] | 104.36 |
| [illegible] | [illegible] | 89.96 |
| [illegible] | [illegible] | 58.96 |
| [illegible] | [illegible] | 190.5 |
| [illegible] | [illegible] | 337.3 |
| [illegible] | [illegible] | 755.54 |
| [illegible] | [illegible] | 56.7 |
| [illegible] | [illegible] | 393.23 |
| [illegible] | [illegible] | 103.87 |
| [illegible] | [illegible] | 85.33 |
| [illegible] | [illegible] | 508.08 |
| | Total_Area (ha) | 7297.57 |

**யாழ்ப்பாணம், மார்ச் 14**
**வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களில் 3 இலட்சத்து 62 ஆயிரத்து 706 ஹெக்ரேயரை சுவீகரித்துள்ள வனவளத் திணைக்களம் இன்னமும் 7 ஆயிரத்து 297 ஹெக்ரேயரை சுவீகரிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இவ்வாறு சுவீகரிக்கப்பட்டால் வடக்கு மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பின் 42 சதவீதம் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் செல்லும். மேலும், போரின் பின்னரே, 37 இடங்கள் வனவளத் திணைக்களத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (ஆர்.ரி.ஐ.) ஊடாக இந்தத் தகவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன.** 12

## கோத்தாவுடன் சந்திப்பு புளொட் பங்கேற்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 14
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள சந்திப்பில் புளொட் அமைப்பு பங்கேற்கும் என்று தெரியவருகின்றது. 12

## 'வரிசையுகம்' முடிய 7 மாதங்கள் செல்லும்
### குண்டைப்போடுகிறார் அமைச்சர் காமினி

கொழும்பு, மார்ச் 14
தற்போதைய எரிபொருள்மற்றும்எரிவாயு வரிசையை முடிவுக்கு கொண்டுவர குறைந்தது இன்னும் ஏழு மாதங்களாகும் என்று தெரிவித்த எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே. 15

## விலை அதிகரிப்புக்கள்
### சிமெந்து – 350 ரூபா
### பஸ், கொள்கலன் கட்டணங்களும் உயர்வு

கொழும்பு, மார்ச் 14
50 கிலோ எடையுள்ள சிமெந்து மூடையின் விலை 350 ரூபாவால் அதிகரித்துள்ளது. அதன் பிரகாரம் ஆயிரத்து 850 ரூபாவுக்கு சிமெந்து விற்பனை செய்யப்படவுள்ளது. அனைத்து 15

## வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் மறுஅறிவித்தல் வரை நிறுத்தம்
### யாழ். போதனா மருத்துவமனை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14
வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர். பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மறுஅறிவித்தல்வரும்வரையில் நிறுத்தப்பட்டுள்ளது 12

## 'இலங்கை நிலை படுமோசம்!'
### பிரஜைகளுக்கு பிரிட்டன் எச்சரிக்கை
### சுற்றுலாத்துறையும் பாதிப்படையும் பேரபாயம்

கொழும்பு, மார்ச் 14
இலங்கையின் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருவது தொடர்பில் தனது நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு பிரிட்டன் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருவது எதிர்காலத்தில் மேலும் குறைவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
டொலர் தட்டுப்பாடு காரணமாக 15

## தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை சிங்கள, முஸ்லிம் மக்கள் உணர்கிறார்கள்
### சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும் என்கிறார் கஜேந்திரகுமார் எம்.பி.

வவுனியா, மார்ச் 14
சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை உணரத் தொடங்கி விட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை சரியாக கையாள வேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 44 பவுண் நகைகள் கோப்பாயில் வழிப்பறி

## பொலிஸாரிடம் முறைப்பாடு

**யாழ்ப்பாணம், மார்ச் 14**
**கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்டபகுதியில் 44 பவுண் நகைகள் , ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கடிகாரம் மற்றும் 26 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த 10ஆம் திகதி இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது என்று முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். கல்யாணகுமாரி என்பவரின் உடைமைகளே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளன. ஆலயத்துக்குச் சென்றுவந்த பின் நகைகளை வீட்டில் வைத்து விட்டு வெளியில் சென்றுவந்து பார்த்தபோது அவை திருடப்பட்டமை தெரியவந்தது என்று முறைப்பாட்டாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-125)



# உரும்பிராயில் நேற்று கையெழுத்து சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி நடத்தப்பட்டுவரும்கையெழுத்துச் சேகரிப்பு நேற்று உரும்பிராயில் நடைபெற்றது.
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி நாடுமுழுவதும் பொது மக்களின் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாணத்திலும் பல இடங்களில் பொதுமக்களின் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று உரும்பிராயில் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.
பெருமளவிலான மக்கள் கையெழுத்திட்டு இந்த நடவடிக்கைக்கு ஆதரவை வழங்கியுள்ளனர். (எ-20)

# பேருந்துக் கட்டணம் அதிகரிக்கப்படாது!

*உரிமையாளர்களுக்கு டீசல் மானியம்?*

கொழும்பு, மார்ச் 14
பேருந்துக் கட்டணங்களை அதிகரிக்கும் எண்ணம் இல்லை. எனினும் பேருந்து உரிமையாளர்களுக்கு, டீசல் மானியத்தை வழங்க முடியுமா? என்பது குறித்து நிதியமைச்சுடன் பேச்சு நடத்தப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.
எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்கத் தீர்மானிக்கவில்லை. நிதியமைச்சருடனான பேச்சில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைவாக, இந்தவாரம் முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
டீசல் மானியம் கிடைக்காவிட்டால், பேருந்துக் கட்டணத்தை 15 வீதத்தால் அதிகரிக்க வேண்டி ஏற்படும் என்று தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ண தெரிவித்துள்ளார்.
அதேவேளை, டீசல் விலை அதிகரிப்புக் காரணமாக நாடளாவியரீதியில் பேருந்துச் சேவைகள் வீழ்ச்சியடைந்துள்ளன என்று அகில இலங்கை பேருந்து உரிமையாளர் சங்க சம்மேளனத்தின் பிரதான செயலாளர் அஞ்ஜன தெரிவித்துள்ளார். (ம-4-இ)



# கட்டுப்பாட்டையிழந்த 'ஹைஏஸ்' மின்கம்பத்துடன் மோதி விபத்து

யாழ்ப்பாணம்,மார்ச் 14
சில்லுக் காற்று குறைந்ததால், வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஹைஏஸ் வீதியை விட்டு விலகி மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.
இந்த விபத்து நீர்வேலி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
குறித்த ஹைஏஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளரை வீட்டில் இறக்கிவிட்டு திரும்பும் போதே விபத்துக்குள்ளானது. (ம-4-27)

# பயங்கரவாதத் தடை சட்டவரைவை நீக்குக

*புதுக்குடியிருப்புப் பிரதேசசபையில் தீர்மானம்*

முல்லைத்தீவு,மார்ச் 14
பயங்கரவாதச் சட்டவரைவை முற்றாக நீக்கக்கோரி, புதுக்குடியிருப்புப் பிரதேசசபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
பிரதேசசபையின் இந்த மாதத்துக்கான அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது உறுப்பினர்களான ஆறுமுகம் ஜோன்சன் மற்றும் சிவபாதம் குகனேசன் ஆகியோரால் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீதான விவாதம் சபையில் முன் வைக்கப்பட்டது.
ஆறுமுகம் ஜோன்சன் உரையாற்றுகையில்;
பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஆயிரக்கணக்கான தமிழர்கள் சித்திரவதைக்குட்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்து, தமது இளமைக் காலத்தில் பல துன்பங்களைச் சந்தித்து வந்தனர். ஈஸ்டர் குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்து 3 வருடங்கள் கழிந்தும் இன்னமும் குற்றவாளிகள் இனங்காணப்படவில்லை. எனவே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இலங்கையில் இருந்து முற்றாக இல்லாமற் செய்யவேண்டும்-என்றார். அந்தத் தீர்மானம் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ம-4-13)



# நாட்டுத் துப்பாக்கியுடன் முல்லையில் ஒருவர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 14
மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வன்னி விளாங்குளத்தில் நாட்டுத் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் 32 வயதுடையவர் என்றும், சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-19)



# சைக்கிள் திருடியவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 14
பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாணவர்களின் சைக்கிள்களைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்டவரிடம் இருந்து 10 சைக்கிள்கள் மீட்கப்பட்டன என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
பருத்தித்துறை, சுப்பர்மடத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார்.
சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், 20 சைக்கிள்களை திருடி விற்பனை செய்ததை ஒப்புக்கொண்டுள்ளார். 10 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. ஏனையவற்றைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.(எ-26)

# வவு. பொதுமயானத்தில் துப்புரவுப் பணி



வவுனியா, மார்ச் 14
வவுனியா தோணிக்கல் பொது மயானத்தில் துப்புரவுப் பணிகள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன.
குறித்த மயானம் நீண்டகாலமாகத் துப்புரவு செய்யப்படாமையால் பற்றைகள் சூழ்ந்த இடமாக மாறியிருந்தது.
இதனால் சடலங்களை எரிப்பதற்கு அல்லது புதைப்பதற்குப் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிய நிலையில் இந்தத் துப்புரவுப் பணி முன்னெடுக்கப்பட்டது.
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் கிராம அலுவலர், பொதுமக்கள் ஆகியோரின் பங்கேற்புடன் இந்த மயானம் துப்புரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-14,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கையகப்படுத்திய காணிகளில் தென்னை முக்கோண வலயம்

## வனப்பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

**யாழ்ப்பாணம், மார்ச் 14**

**வனஜீவராசி திணைக்களம் கையகப்படுத்தியுள்ள காணிகளில் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று வனஜீவராசிகள் வனப்பாதுகாப்பு அமைச்சின் வடக்குக்கான திட்டங்களின் ஆலோசகர் சகாதேவன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; வடக்கில் தென்னை முக்கோண வலயங்களை அடையாளப்படுத்தி தென்னந்தோப்புக்களை உருவாக்கி, மக்களின் வாழ்வாதரங்களை உயர்த்தும் வகையிலான திட்டங்களைக் கையளித்துள்ளோம். அந்தத் திட்டங்களை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அதற்கமைவாக 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் வனக் கிராமம் உருவாக்கப்படும்.

வடக்கில் குறிப்பாக நெடுந்தீவைப் பூர்வீகமாகக் கொண்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக திட்டங்களையும் கையளித்துள்ளோம். உடனடியாக அந்தத் திட்டங்கள் நடைமுறைக்கு வரவுள்ளன.

நெடுந்தீவு இலங்கையில் சனத்தொகையில் அடர்த்தி குறைந்த பிரதேசம். அதனால் அந்தத் தீவு தனித்து விடப்பட்டுள்ளது. அபிவிருத்தியிலும் பின்தங்கிக் காணப்படுகின்றது. மக்களுக்கான வாழ்வாதாரம் இல்லை. 30 ஆயிரம் மக்களுக்கு மேல் வசித்த பகுதியில், தற்போது 3 ஆயிரம் பேர் வசிக்கின்றனர்.

கடந்த காலங்களில் தேங்காய் உற்பத்தி, பால் உற்பத்தி, கடலுணவு என அனைத்திலும் தன்னிறைவு கண்ட மக்கள், இன்று தன்னிறைவு காணமுடியாத நிலையில் உள்ளனர்.

தற்போதைய புதிய திட்டத்தால் புதிய பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படும். அதனூடாக ஏறக்குறைய ஒன்றரை பில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும். அங்குள்ள மக்களுக்கும் காணிகள் கிடைக்கும். நெடுந்தீவு மாத்திரமன்றி மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, வடமராட்சி மணற்காடு உள்ளிட்ட பிரதேசங்களிலும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ம-4-20)

## கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறைப் பகுதியில் கைதுசெய்யப்பட்ட ஒருவரை 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஊர்காவற்றுறை குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, 47 கிராம் கஞ்சாவுடன் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைதானவர் 50 வயதுடையவர். (வ-23,27)

## இராமேஸ்வரம் கடலில் ஒதுங்கிய மர்மப் படகு!

### ஆள்கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதா? என்ற கோணத்தில் விசாரணை துரிதம்

சென்னை, மார்ச் 14

இந்தியாவின் இராமேஸ்வரம் கடற்கரையில் ஆள்களற்ற படகொன்று நேற்றுமுன்தினம் கரையொதுங்கியுள்ளது.

இந்தப் படகு யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவுக்கு சட்டவிரோத ஆள்கடத்தல்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை அந்த நாட்டுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4-20)



## பியர் விற்பனை சந்தேகநபர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 14

அளவுக்கதிகமாக பியர் ரின்களைக் கொள்வனவு செய்து, அவற்றை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில், குடும்பத்தலைவர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

நட்டாங்கண்டல் பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, மாந்தை கிழக்கு, நட்டாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் இருந்து 62 பியர் ரின்கள் கைப்பற்றப்பட்டன. அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ம-4-19)

## வீதிவீதியாகத் தடுப்பூசி மன்னாரில் முன்னெடுப்பு

மன்னார். மார்ச் 14

மன்னார் மாவட்டத்தில் வீதி வீதியாகச் சென்று பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் பணியை சுகாதாரத் துறையினர் முன்னெடுத்துள்ளனர்.

கொரோனாத் தடுப்பூசி அட்டை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதியிலிருந்து கட்டாயமாக்கப்படவுள்ளதால் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புக்கமைய இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி நானாட்டான் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையில் அண்மையில் தள்ளாடிச் சந்தியிலும் கடந்த வெள்ளிக்கிழமை நானாட்டான் கடை வீதிகளிலும் பொதுமக்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டது. (வ-213)



## புதினம் தெரியுமோ?

இந்தமுறை கச்சதீவுத் திருவிழாவுக்கு முதலில கூட ஆக்களை அனுமதிக்கிறது எண்டுதான் முடிவு செய்திருந்தவை. ஆனால் அதுக்கிடையிலை ரண்டுதரப்பு மீனவர்களுக்கும் இடையில பெரும் முறுகல் வந்து, தொடர் போராட்டமாகி கஷ்டப்பட்டுத்தான் அது முடிவுக்கு வந்தது. 'இலங்கைக்கடல் பகுதிக்குள்ள ரோலரில வந்து மீன்பிடிக்கிறதை நிப்பாட்ட வேணும்' எண்டதுதான் இலங்கை மீனவர்களின்ர நிலைப்பாடு. மற்றப்படி இந்திய மீனவர்களோட எந்தப் பிரச்சினையும் அவைக்கு இல்லை.

எண்டாலும் இப்ப ரண்டு தரப்பும் கீரியும் பாம்பும் மாதிரி நிக்கிறதால, கச்சதீவில நேருக்கு நேர் சந்திக்கேக்க ஏடகூடமா ஏதும் நடந்திடுமோ? எண்ட பயத்திலதான் ரண்டு தரப்பில இருந்தும் தலா 50 பேர் மட்டும் கச்சதீவுத் திருவிழாவுக்கு போகலாம் எண்டு முதலில அறிவிச்சவை. பிறகு கடைசி நேரத்தில அதைவிடவும் கூட ஆக்கள் போகலாம் எண்டு சொன்னாலும், அதுக்கிடையில பதிவு செய்து, படகைப் பிடிச்சு போறதெல்லாம் நடக்காத காரியமெண்டதால, அங்கால 50பேர், இஞ்சால 50பேர் எண்டு நூறுபேர் மட்டிலதான் போனவை.

போன இடத்தில எல்லாரும் எதிர்பார்த்த மாதிரி, இந்திய மீனவரும், இலங்கை மீனவரும் முறுகுப்படேலையாம். அண்ணன், தம்பி மாதிரி ஆளுக்காள் பாசமழை பொழிஞ்சினமாம். இப்பிடி ரண்டுதரப்பும் பாலும் பழமுமா பழகிறதைப் பார்த்த, மீன்பிடி அமைச்சர் முதலே சொன்ன மாதிரி அங்க ஒரு பேச்சுவைக்க நினைச்சிருக்கிறார். ஆனால் அதுக்கு ரண்டு தரப்பும் ஒத்துக்கொள்ளேலையாம்.

'சும்மா வேணுமெண்டால் கதைக்கலாம். பேச்சு கீச்சு எல்லாம் இங்க வைக்க வேண்டாம். நாங்கள் அந்தோனியாரைக் கும்பிடத்தான் வந்திருக்கிறம். அதைக் குழப்ப வேண்டாம்' எண்டு பக்குவமாக அமைச்சருக்கு சொல்லியிருக்கினம். அதுக்குப் பிறகு ரண்டுதரப்பு மீனவரையும் வைச்சுக் கொண்டு வேற சில கதையளை அமைச்சர் டக்ளஸ் கதைச்சுக் கொண்டிருந்திருக்கிறார். அப்ப வழமைமாதிரி ஒவ்வொருத்தரும் தாங்கள் கொண்டுவந்த பலகாரங்கள், சாப்பாட்டுச் சாமன்களை மற்றவைக்கு குடுத்திருக்கினம். அப்பிடி ஒரு இந்திய மீனவர் 'அல்வா' வாங்கிக் கொண்டு வந்து, அங்க இருந்தவைக்கெல்லாம் குடுக்கேக்க அமைச்சருக்கும் குடுத்திருக்கிறார். அதை ஒருக்கா அமைச்சர் பாத்திட்டு, "அட எனக்கே அல்வாவா?" எண்டு நக்கலாக் கேட்டிட்டு எடுத்துச் சாப்பிட்டாராம்.

அவர் சொன்னாலும் சொல்லாட்டியும் இந்திய மீனவர் அல்வா குடுத்துக் கொண்டுதானே இருக்கினம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 14
தேசிய சேமிப்பு வங்கியின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு வங்கியின் யாழ். பிரதான கிளையில் இடம் பெறவுள்ளது. (ம-14)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 14
இலங்கை சாரணர் சங்க பருத்தித்துறை மாவட்ட கிளைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பருத்தித்துறைப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-14)

## நினைவுமலர் நூல் வெளியீடு

தலைமன்னார், மார்ச் 14
மன்னார் பிராந்திய முன்னாள் கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ.சி.அப்துல் ஹக்கின் 10ஆவது ஆண்டு நினைவுமலரான 'ஹக் சேர்' நூல் வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை மன்னார் நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.
மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தின் அதிபர் அருட்பணி தமிழ்நேசன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை கலந்துகொண்டார்.
சிறப்பு விருந்தினர்களாக மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் தே.தேவதயாழினி, முன்னாள் மன்னார் மாவட்டச் செயலர்களான எஸ்.மரியதாசன் குரூஸ், வி.விஸ்வலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.
மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை முதல் நூலை வெளியிட்டுவைத்தார். (ச-60)

# 'வீ பீடர்ஸ்'அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் மாட்டுப்பொங்கல்






**கிளிநொச்சி, மார்ச் 14**
**பசுக்களைப் போற்றும் வகையிலும் அவற்றுக்கும் மனிதசமூகத்துக்கும் இடையிலான பிணைப்பைப் பறைசாற்றும் வகையிலும் 'வீ பீடர்ஸ்' அமைப்பின் ஏற்பாட்டில் மாட்டுப் பொங்கல் நிகழ்வு கிளிநொச்சியில் அண்மையில் இடம்பெற்றது.**

விலங்குகளின் நலனைக் கருத்திற்கொண்டு செயற்படும் தன்னார்வ அமைப்பான 'வீ பீடர்ஸ்' நடத்திய இந்த நிகழ்வு மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.
நிகழ்வின்போது மாடுகளுக்கு பொங்கல் செய்து படைக்கப் பட்டது.
'வீ பீடர்ஸ்' அமைப்பானது தெருவோரங்களில் கைவிடப்படும் விலங்குகளுக்கு உணவளித்தல், விபத்தால் பாதிக்கப்பட்ட விலங்குகளுக்கு சிகிச்சையளித்தல் உள்ளிட்ட பல சேவைகளையும், ஜீவகாருண்யம் தொடர்பில் மாணவர்களுக்குக் கருத்தரங்குகளையும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-வ-இ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 14
ஊர்காவற்றுறை, நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதியில் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோயிலில் 'பௌர்ணமி விரத கால' சிறப்புச்சொற்பொழிவு நிகழ்வு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
'சைவர்கள் வாழ்வில் பூரணை' என்னும் தொனிப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவை இளம்சைவப் புலவர் நித்தியபாபுதரன் ஆற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களுக்கு வினாக்கள் கேட்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்படும். (ய)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், மார்ச் 14
உலகில் வாழும் அனைத்து மக்களும் சுபீட்சமானதொரு வாழ்வு வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக யாழ்ப்பாணம், துன்னாலை இந்திரன் கண்ணகை அம்மன் கோயிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சி.இந்திரராஜக்குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயணமும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ய)



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் யாழ்.அலுவலகத்தின் ஏற்பாட்டில், நீர் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் வேலணை மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரி ஷா.தாரகா தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-14,159)

## சுகாதாரக் கருத்தரங்கு

கொழும்பு, மார்ச் 14
கொழும்புத் தமிழ்ச் சங்கம் நிகழ்த்தும் சுகாதாரக் கருத்தரங்கு, சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.
இதன்போது 'கொரோனாவுக்குப் பின்னரான வாழ்க்கையும் பின்னர் ஏற்படக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும்' என்ற தலைப்பில் வெள்ளவத்தை சுகாதார மருத்துவ காரியாலய, மூத்த மருத்துவ அதிகாரி கார்த்திகேசு ஸ்ரீபிரதாபன், கொழும்புத் தமிழ்ச் சங்க, நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர் சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன் ஆகியோர் உரைநிகழ்த்தவுள்ளனர். (ம-ய)





யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில், வாராந்தச் சொற்பொழிவும் கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவில் உள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் உடுப்பிட்டி கலாசார மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றன. (ய)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது. இதன்போது பாடசாலை அதிபர் திருமதி [illegible]ஜினி இதய சிவதாஸ் மாணவர்களுக்கு சின்னங்களை சூட்டினார். (ச-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கிக்கு புதியதொரு ஆளுநர்?

கொழும்பு, மார்ச் 14
நிதியமைச்சுக்கும் மத்திய வங்கிக்கும் இடையிலான முரண்பாடு காரணமாக புதிய ஆளுநர் நியமிக்கப்படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.
சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது தொடர்பில் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கும் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கும் இடையில் முரண்பாடுகள் வலுவடைந்துள்ளன.
சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் மத்திய வங்கி ஆளுநர் தொடர்ந்தும் உள்ளார்.
இதனால் பஸில் அதிருப்தியடைந்துள்ளார் என்று நிதியமைச்சின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

# தேசிய அரசு தொடர்பில் கலந்துரையாடவில்லை!

## தயாசிறியும் கைவிரிப்பு



**கொழும்பு, மார்ச் 14**
**தேசிய அரசு தொடர்பில் நாம் கலந்துரையாடவில்லை. அவ்வாறான தொரு அரசை அமைக்க நாம் உடன்பட மாட்டோம். அவ்வாறு தேசிய அரசு அமைந்தால்கூட அமைச்சுப் பதவிகளை வகிக்க மாட்டோம் -என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

சுதந்திரக் கட்சியின் பதுளை மாவட்ட மாநாடு, கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இது தொடர்பில் தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்ததாவது:-
'நாடு இன்று கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.
இது தொடர்பில் அரசு கதைப்பதில்லை. எல்லா இடங்களிலும் கையேந்தும் நிலைமையே காணப்படுகின்றது. இதன்மூலம் கடன் சுமை அதிகரிக்கின்றது. ஒரு பில்லியன் டொலர்கூட எமது கைவசம் இல்லை.
எனவே, உண்மை நிலைவரத்தை நாட்டு மக்களுக்கு அரசு தெளிவுபடுத்த வேண்டும்.
இன்று இலங்கைக்கு கடன் கொடுக்க எவரும் இல்லை. தனித்துவிடப்பட்டுள்ளோம். எனவே, வங்குரோத்து அடையும் நிலை ஏற்பட்டுள்ளதால் எமக்கு நிபந்தனைகள் விதிக்கப்படலாம். கடன்களை வழங்குவதற்காக எமது நாட்டு வளங்களைக் கோரலாம்' -என்றார். (ம)



# கடன் மறுகட்டமைப்புக்காக நாணய நிதியத்தை நாடவில்லை

## மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14
அடுத்த சில வாரங்களில் இடம்பெறவுள்ள இலங்கை அதிகாரிகளுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்புக்கள் கடன் மறுசீரமைப்பு நோக்கத்துக்காக அல்ல என இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.
கடன் மறுசீரமைப்பு மற்றும் அதன் அந்நியச் செலாவணி பற்றாக்குறையை நிர்வகிப்பதற்காக உதவும் திட்டம் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை கலந்துரையாடல்களை ஆரம்பிக்கும் என ஆதாரங்களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகமான ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டிருந்த நிலையில் கப்ரால் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம)

# அபிவிருத்தித் திட்டங்களைக் கைவிட்டு அத்தியாவசிய தேவையை கவனியுங்கள்

## மத்தியவங்கி அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, மார்ச் 14
புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களை தற்காலிகமாகக் கைவிடுமாறு அரசுக்கு, இலங்கை மத்திய வங்கி பரிந்துரைத்துள்ளது.
இந்தப் பரிந்துரையில் அரசாங்கத்தால் பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒருலட்சம் வேலைத்திட்டமும் உள்ளடங்குகின்றது. நாட்டில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையிலேயே இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.
எனினும், மத்திய வங்கியின் யோசனையை அரசு ஏற்குமா என்பது பற்றி இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை. (வ-இ)

# முட்டாள்கள் இருந்தாலே தேசிய அரசு அமையும்!

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



தேசிய அரசாங்கம் ஒன்றை தற்போது அமைக்க முடியாது என நம்புகிறேன். நாட்டின் இன்றைய சூழ்நிலையில், தேசிய அரசாங்கத்தில் இணைய வரும் முட்டாள்கள் யார் என்பதை சிந்திக்கின்றேன். அப்படியான முட்டாள்கள் இருந்தால், தேசிய அரசாங்கம் அமையும்.
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். இலங்கையின் அரசியல் வட்டாரத்தில் மீண்டும் தேசிய அரசாங்கம் பற்றிப் பேசப்பட்டுவருகிறது. அந்தத் தேசிய அரசாங்கத்தில் பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகின. அண்மையில் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ஸ இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:- கொரோனாத் தொற்று நோய்க் காலத்திலேயே தேசிய இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். அந்த நேரத்தில் சர்வ கட்சி மாநாட்டை நடத்துமாறு பல தரப்பில் இருந்தும் கோரிக்கை விடுத்தபோதும் அரசாங்கம் அதைச் செய்யவில்லை. அது நடந்து இருந்தால், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கும் அதைப் பயன்படுத்தி இருக்கலாம். நாட்டின் நிலைமை தற்போது படுமோசமாக மாறியுள்ளது. இதனால், இப்படியான நேரத்தில் தேசிய அரசாங்கத்தை அமைப்பது பெரும் மூடத்தனமான செயல் -என்றார். (எ-இ)

# தேசிய அரசாங்கமா? திட்டம் ஏதுமில்லை

## பிரதமர் உறுதி

தேசிய அரசாங்கம் அமைக்கும் திட்டம் எதுவும் கிடையாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
தேசிய அரசாங்கம் நிறுவப்படவுள்ளதாகவும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான இந்த அரசாங்கத்தின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க கடமையாற்றுவார் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் மேற்படி கருத்துக்களை பிரதமர் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.
தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவுதல் தொடர்பில் எந்தவித பேச்சு நடத்தப்படவில்லை. அவ்வாறான திட்டங்கள் எவையும் அரசாங்கத்திடம் இல்லை என்று பிரதமர் மேலும் தெரிவித்தார். (ம)

# நிபந்தனையில்லா ஆதரவைத் தருக

## எதிர்க்கட்சியைக் கோருகின்றார் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க

கொழும்பு, மார்ச் 14
தேசிய அரசு என்ற பேச்சுக்கு அப்பால், தற்போதைய சூழ்நிலையில் எதிரணிகள் நிபந்தனையற்ற ஆதரவை அரசுக்கு வழங்க வேண்டும் என்று கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். நுவரெலியாவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:
உலக சந்தையில் இன்று பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. கொள்கலன்களுக்கான போக்குவரத்துக் கட்டணமும் அதிகரித்துள்ளது. இவற்றின் தாக்கம் இலங்கையிலும் எதிரொலிக்கின்றது. பெரும் நட்டத்துக்கு மத்தியிலேயே எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது. நட்டத்தை அரசு தாங்கிவருகின்றது. இவ்வாறான நெருக்கடி நிலையில் இருந்து கட்டங்கட்டமாகவே மீள வேண்டும்.
இன்னும் ஒரு வாரத்துக்குள் மின்சாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடி தீரும். ஆடைக் கைத்தொழில்மூலம் வருமானம் வரத் தொடங்கியுள்ளது. சுற்றுலாத்துறையும் எழுச்சி கண்டு வருகின்றது. வெளிநாடுகளில் தொழில் புரிபவர்கள் பணம் அனுப்புகின்றனர்.
இது நெருக்கடியான காலகட்டம். எனவே, தேசிய அரசு என்பதற்கப்பால் எதிரணிகள் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க வேண்டும். பிரிட்டன் போன்ற நாடுகளில் அவ்வாறு நடக்கின்றது. பிற நாடுகளில் அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்பட்டது.
ஆனால், நாம் அவ்வாறு செய்யவில்லை. எனவே, நெருக்கடி நிலைமையை நாம் பகிர்ந்துகொள்ள வேண்டும் -என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுக்கு எதிராக

# விமல், கம்மன்பில இணைவில் விரைவில் பெரும் போராட்டம்

## அரசின் பங்காளிக்கட்சிகளும் ஆதரவு?

**கொழும்பு, மார்ச் 14**

**முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் இணைந்து அரசாங்கத்துக்கெதிரான மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.**

மக்கள் மத்தியில் உருவாகியுள்ள அரச எதிர்ப்பு அலையை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் 'தாய் நாட்டை மீட்போம்' என்ற தொனிப் பொருளின்கீழ் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு அரசில் அங்கம் வகிக்கும் சில பங்காளிக்கட்சிகளும் மறைமுக ஆதரவை வழங்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கூட்டம் நடைபெறும் நாளில், விமல் தரப்புக்கு ஆதரவை வெளிப்படுத்தவுள்ளனர் எனவும் தென்னிலங்கை அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ-இ)

# இளைஞர் மாயம்

கொழும்பு, மார்ச் 14

அரநாயக்க - உஸ்ஸாபிட்டிய பிரதேசத்தில் மாஓயா ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த நால்வரில் ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமற்போயுள்ளார். 19 வயதான இவர் உடுவெலவ பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். காணாமற்போன நபரை தேடும் பணிகளை பொலிஸார் மற்றும் கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

# ஏற்றுமதி விதிமுறைகள் வர்த்தமானி வெளியீடு!

கொழும்பு, மார்ச் 14

ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் விதிமுறைகள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலால் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு 16 விதிகள் அடங்கிய இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு ஏற்றுமதியாளரும், இலங்கைக்கு வெளியில் ஏற்றுமதி செய்யப்படும் எல்லாப் பொருள்கள் அல்லது வழங்கப்படும் பணிகள் தொடர்பில், கப்பலேற்றும் அல்லது பணிகளை வழங்கும் திகதியிலிருந்து 180 நாள்களினுள் ஏற்றுமதிப் பெறுகைகளை கட்டாயமாக இலங்கையில் பெறுதல் வேண்டும். அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தி இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளில் எஞ்சியதை, தொடர்ந்து வருகின்ற மாதத்தின் ஏழாவது நாளன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றுதல் வேண்டுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

# சர்வகட்சி மாநாட்டுக்கு இதுவரை அழைப்பில்லை

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 14

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்குமாறு எமக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்படவில்லை. அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டால் நிபந்தனையின் அடிப்படையிலேயே பங்கேற்போம் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;-

சர்வகட்சி மாநாட்டில் நாம் பங்கேற்பதாக இருந்தால், மாநாட்டுக்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகள் மற்றும் அரசின் நிதி நிலைவரம் தொடர்பான உண்மையான தரவுகள் எமக்கு வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் சிறந்த கலந்துரையாடலை முன்னெடுக்கமுடியும். எமக்கு இன்னும் அழைப்பு விடுக்கவில்லை. அவ்வாறு கிடைத்தால் அது தொடர்பில் பரிசீலிக்கப்படும். ஆவணங்கள் முன்கூட்டியே வழங்கப்பட்டால்தான் பேச்சுக்கு செல்ல முடியும் -என்றார். (வ-இ)

# வியர்வையைக் கட்டுப்படுத்த உப்பை உட்கொள்ளலாமா?

## ஆதாரமற்ற கருத்து என்று ஊட்டச்சத்துப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 14

உடலில் வியர்வை அதிகமாக வெளியேறும்போது உப்பு அதிகம் உட்கொள்ள வேண்டுமென்ற தகவல் வேகமாகப் பரவி வருவதால் மக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. இவை ஆதாரமற்ற கருத்துக்கள். எனவே பொதுமக்கள் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டுமென்று மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் போஷாக்குப் பிரிவின் பிரதம ஊட்டச்சத்து நிபுணர் மருத்துவர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

உடலில் வியர்வை அதிகமாக வெளியேறும்போது உப்பு அதிகம் உட்கொள்ளவேண்டுமென கட்டுக்கதை பரவி வருகின்றது. அவற்றை நம்ப வேண்டாம். ஒருநாளைக்கு 5 கிராம் உப்பு மட்டுமே போதுமானது. உடலுக்கு அதிகளவில் உப்பைச் சேர்த்துக் கொண்டால் ஏற்படும் பாதிப்புக்கள் அதிகம் -என்றார். (ம)

# மருத்துவ உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 14

புலம்பெயர்ந்தவர்களின் நிதிப்பங்களிப்பில் தொல்புரம் ஆரம்ப மருத்துவப் பிரிவு மருத்துவமனைக்கு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு, நாளை தொல்புரம் ஆரம்ப மருத்துவப் பிரிவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் வே.குருபரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அ.கேதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-14)

# இந்திய ரயில் பெட்டிகளின் இணைப்பு கைவிடப்பட்டது

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள ரயில் பெட்டிகளை போக்குவரத்தில் இணைக்கும் நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன. பெட்டிகளை ஒன்றோடொன்று இணைக்கும் பகுதியில் காணப்பட்ட கோளாறு காரணமாக கடந்த 4ஆம் திகதி முதல் குறித்த ரயில் பெட்டிகளை போக்குவரத்தில் இணைக்கும் செயற்பாடுகள் கைவிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் ரயில் போக்குவரத்து அத்தியட்சகர் காமினி செனவிரத்னவிடம் வினவியபோது, சாரதிகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் சங்கங்கள் என்பன குறித்த ரயில் பெட்டிகளை போக்குவரத்தில் இணைக்காதிருப்பதற்கு தீர்மானித்துள்ளன.

இது தொடர்பிலான அறிக்கை பொறியியலாளர்கள் சங்கத்தினால் இதுவரை வழங்கப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# டொலரில் தீர்வை செலுத்தினால் வாகன இறக்குமதிக்கு அனுமதி!

## பரிந்துரைக்கின்றது மத்திய வங்கி

கொழும்பு, மார்ச் 14

அமெரிக்க டொலரில் சுங்கத் தீர்வையை செலுத்தி வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்க வேண்டுமென்று மத்திய வங்கி, அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

நாட்டில் நிலவி வரும் டொலர் பிரச்சினைக்கு தீர்வாக இந்தப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

டொலரில் சுங்கத் தீர்வை செலுத்தி வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டால், சிலரிடம் கையிருப்பிலுள்ள டொலரைச் சந்தைக்குக் கொண்டு வர முடியும் என மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இருந்தபோதும், வழமையான முறையில் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்க முடியாது எனவும், அது தற்போதைய பொருளாதார சூழ்நிலைக்கு உசிதமானதல்ல எனவும் இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அதி சொகுசுப் பொருள்களை இறக்குமதி செய்வதை இரத்துச் செய்வதை விடவும் அவற்றுக்குக் கூடுதலான வரி அறவீடு செய்வது மிகவும் பொருத்தமானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான தீர்வு என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நாளொரு நல்வார்த்தை

"ஆத்திரம் என்பது நீங்கள் விஷம் குடித்துவிட்டு, மற்றவர் இறப்பார் என காத்திருப்பதைப் போன்றது"

- கேரி ஃபிர்

## நவீன மாதனமுத்தவின் முடிவுகள்

நாட்டின் இப்போதைய நிலைமையையும், ஆட்சியாளர்களின் அபத்தமான முடிவுகளையும் பார்க்கும்போது இலங்கையர்களின் மனக்கண்முன்னே 'மாதனமுத்த' வந்து போகவே செய்வார். தமிழில் 'அதிபரமார்த்தகுரு' போல சிங்களத்தில் 'மாதனமுத்த' என்ற கற்பனைப்பாத்திரத்தின் கதைகள் வெகு பிரசித்தம். உதாரணத்துக்கு ஒரு கதை.

குடியானவன் ஒருவனின் பசுக்கன்று, நீரருந்தும்போது பானைக்குள் தலையை நுழைத்துவிட்டது. எவ்வளவோ முயன்றும் அதன் தலையை பானைக்குள் இருந்து மீட்கமுடியவில்லை. அதனால் மாதனமுத்தவுக்கு அறிவிக்கப்பட்டது. அவரும் தன் சீடர்கள் புடைசூழ, யானையில் ஏறிச் சென்றார். ஆனால் குடியானவனின் வீட்டுவாசல் குறுகலானது. யானை புக முடியாது. எனவே வாசலை உடைத்து யானையோடு உள்ளே போனார் மாதனமுத்த. சென்றவர், ' என்ன பிரச்சினை? என்ன செய்யவேண்டும்?' எனக்கேட்டார்.

'பானைக்குள் கன்றின் தலை சிக்கிவிட்டது. பானையை கன்றில் இருந்து பிரித்தெடுக்க வேண்டும்' என்றான் குடியானவன்.

'ப்பூ . இவ்வளவுதானா?' என்று சொல்லிவிட்டு, கூரிய கத்தியால் கன்றின் கழுத்தை வெட்டினார். இப்போது பானை கன்றில் இருந்து கழன்றுவிட்டது. பின்னரும் குடியானவன் கவலையோடு நிற்பதைப் பார்த்த மாதனமுத்த, ' இனியென்ன கவலை?'என்று கேட்டார். 'ஐயா, பானை வந்துவிட்டது. ஆனால் கன்றின் தலை.... பானைக்குள் இருக்கிறதே' என்றான். 'அட அவ்வளவுதானா? இதோ அதற்கும் தீர்வு உண்டு' என்று சொல்லிவிட்டு, பானையை தூக்கி ஒரே போடாகப் போட்டார். பானை சிதறியது. தலை வெளியே வந்தது. தன் அறிவைத் தானே வியந்து கொண்டு அங்கிருந்து வெளியேறினார் மாதனமுத்த.

இந்தக் கதையைப் படிக்கும் போது ஏழுமூளை கொண்டவர் என வர்ணிக்கப்பட்ட நிதியமைச்சர் பஸில் , உங்கள் மனக்கண்களுக்கு மாதனமுத்தவாக தெரிந்திருப்பார். ஏனெனில் இலகுவாகத் தீர்க்கவேண்டிய இலங்கையின் பொருளாதாரத்தை தன் ஏழுமூளை வல்லமையைக் காட்டுவதாக நினைத்துக்கொண்டு நவீன மாதன முத்தவான பஸில் ராஜபக்ச எடுத்த அதிமுட்டாள்தனமான முடிவுகள்தான் இவ்வளவுதூரம் பாதிப்புக்கு காரணம். எந்தவிதமான பொருளாதார தொலைநோக்குமின்றி, கண்மூடித்தனமாக நாணயத்தாள்களை அச்சிட்டமை தொடக்கம் இப்போது 367 பொருள்களுக்கு இறக்குமதித் தடைவிதித்தது வரை பஸில் பிடுங்கியவை எல்லாமே தேவையில்லாத ஆணிகளே. அத்தோடு இந்த முடிவுகளால் எதிர்மறையான விளைவுகள் ஏற்பட்டு, நிலைமையை இன்னமும் சிக்கலாக்கி, இலங்கையின் பொருளாதாரத்தை எவராலுமே நிமிர்த்தமுடியாது என்றளவுக்கு கொண்டுவந்துள்ளன.

ஒரு நாட்டின் மத்தியவங்கியின் கையிருப்பிலுள்ள தங்கத்தின் அளவுமுதல் ஏராளமான பொருளாதார விடயங்கள் கணிப்பிடப்பட்டே எவ்வளவு நாணயத்தாள்களை அச்சிடவேண்டுமென்று தீர்மானிக்கப்படும். ஆனால், காகிதம் இருக்குமளவுக்கு காசுத்தாள்களை அச்சடித்தால், தனக்குரிய பெறுமதியை இலங்கை ரூபா இழந்துதானேயாக வேண்டும். இறக்குமதியை நிறுத்தினால் டொலர் வெளியேற்றம் கட்டுப்படும் என்ற இன்னொரு அரிய கண்டுபிடிப்பாலேயே, ஏராளமான இறக்குமதிகளுக்கு தடை போடப்பட்டுள்ளது. ஆனால், தங்கள் நாட்டு இறக்குமதிகளுக்கு தடை விதித்த கோபத்தில பலநாடுகள் இலங்கைப் பொருள்களை தாம் இறக்குமதி செய்யாமல் விட்டால், நிலைமை இன்னும் மோசமாகிவிடுமே? வெள்ளம் தலைக்குமேல் போன பின்னர் சர்வதேச நாணய நிதியத்திடம் ஓடுகிறார் பஸில். இதே முடிவை இலங்கையின் பொருளியல் நிபுணர்களும், எதிர்க்கட்சிகளும் பல மாதங்களுக்கு முன்னர் சொன்னபோது எடுத்திருந்தால் ஏதும் பயன் இருந்திருக்கும். அவசரவிடுதியில் இருந்தபோது இலங்கைப் பொருளாதாரத்தை சர்வதேச நாணய நிதியம் காப்பாற்ற வாய்ப்பிருந்திருக்கும். ஆனால் இப்போதோ கிட்டத்தட்ட இலங்கைப் பொருளாதாரத்தின் மூச்சு நின்றே விட்டது. கோமா நிலைக்குள் போய்விட்ட இலங்கைப் பொருளாதாரத்தை இனி சர்வதேச நாணய நிதியம் தலைகீழாக நின்றாலும் காப்பாற்றுவதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவே. 'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்' என்ற வள்ளுவன் வாக்குக்கு மாறாக, எத்தனையும் முடிக்க முடியாதவர்களிடம் பொறுப்பைக் கொடுத்ததன் விளைவை காலம் பூராவும் இலங்கை அனுபவிக்கப்போகிறது.




# குடும்பக் கட்சியுடன் இணையமாட்டோம்

### மஹிந்தவின் கருத்துக்கு விமல், கம்மன்பில பதிலடி

கொழும்பு, மார்ச் 14

எந்தத் தேர்தல் வந்தாலும் ராஜபக்சக்களின் குடும்பக் கட்சியுடன் நாம் இணையவேமாட்டோம். அவ்வளவுக்கு நாம் முட்டாள்களும் அல்லர்- இவ்வாறு முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் சுவட்டாகப் பதிலடி வழங்கினர்.

"முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் தேர்தலொன்று வரும்போது எங்களைத் தேடி வருவார்கள்" என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

பிரதமரின் இந்தக் கருத்து தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸ, புதிய ஹெல உறுமயவின் தலைவரான உதய கம்மன்பில ஆகியோர் ஊடகங்களிடம் நேற்றுத் தெரிவித்ததாவது:-

'எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம்.

எந்தத் தேர்தல் வந்தாலும் ராஜபக்சக்களின் குடும்பக் கட்சியுடன் நாம் இணையவே மாட்டோம். அவ்வளவுக்கு நாம் முட்டாள்களும் அல்லர். தேர்தல் அறிவிப்பு வந்ததும் எமது அதிரடி ஆட்டங்களை பொதுஜன பெரமுனவினர் பார்ப்பார்கள். நாம் பதவிகளுக்காக அலைபவர்கள் அல்லர். பதவி ஆசை எமக்கு இருந்திருந்தால் அரசுக்குள் இருந்துகொண்டே அரசின் மோசமான செயல்களை விமர்சித்திருக்கமாட்டோம்.

நாட்டின் நலன்கருதியும், இந்த ஆட்சிக்கு ஆணை வழங்கிய மக்களின் நம்பிக்கைக்கும் மதிப்பளித்தே உண்மைகளை வெளியில் உரக்கச் சொன்னோம்.

அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தோம். அதனால் எமது அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி பிடுங்கி எடுத்தார் -என்றனர். (ம-22)

# திரைப்படவிழா இறுதி நாள் இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றுவரும் 7ஆவது யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழாவின் நிறைவு நாளான இன்று மு.ப. 10 மணிக்கு அரியரத்ன அத்துகலவின் 'சகோ' எனும் இலங்கைத் திரைப்படத்தின் காட்சிப்படுத்தலுடன் ஆரம்பமாகும். பல்கலைக்கழக நண்பர்களில் ஒருவர் இலவசக் கல்வியை வலியுறுத்துவதற்கான எதிர்ப்புப் போராட்டமொன்றில் மர்மமான முறையில் இறந்துவிடுகிறார். அவரது இறப்பும் அதன் பின்னரான தேடுதல்களையும் திரைக்கதை பேசுகின்றது.

பி.ப. 1.15 மணிக்கு 'மௌனத்துடன் போராடுதல்: உரையாடுதலுக்கான திரைப்படம்' எனும் தலைப்பில் பிரசன்ன விதானகே, அனோமா ராஜகருண மற்றும் சிவராஜ் ஆகியோருடனான கலந்துரையாடல் நிகழவுள்ளது.

பி.ப. 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, நுண்கலைத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. தா. சனாதனின் 'சினிமாப் பைத்தியம்: யாழ்ப்பாணத்தில் சினிமாத் தியேட்டர்கள் மற்றும் பார்வைத்துவம் 1930-2000' எனும் தலைப்பிலான உரை இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் இன்னொரு அம்சமாக 'நவீன சினிமா நிலவுருவில் வர்ணத் தொனிநிலைப்படுத்தல்' எனும் தலைப்பிலான நிபுணரின் வகுப்பு இல. 50, கண்டிவீதியிலுள்ள 'கலம்' நிறுவனத்தில் மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 1.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

இறுதியாகப் இரவு 7மணிக்கு விருது வழங்கும் நிகழ்வு கார்கில்ஸ் சதுக்கத்திலுள்ள றீகல் சினிமாவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண சர்வசே திரைப்பட விழாவின் இறுதித் திரையிடலாக, பிரசன்ன விதானகேயின் 'காதி' (சூரியனின் பிள்ளைகள்) என்ற இலங்கைத் திரைப்படமானது காட்சிப்படுத்தப்படும். (ஒ.இ)

நாளை 15.03.2022 செவ்வாய்க்கிழமை பங்குனி 1

சுபநேரம் : 10.51 - 12.21

ராகுகாலம்: 03.21 - 04.51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தினரை அனுசரிப்பதால் நன்மை காண்பீர்கள். முயற்சிகள் கைகூடும். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். வேலை வாய்ப்பு தொடர்பாக நல்ல செய்தி வந்து சேரும்.

**இடபம்:** பணியிடத்தில் உற்சாகம் குறையாமல் பணியாற்றுவீர்கள். நண்பர்களிடம் பகை எண்ணம் வேண்டாம். நிதானமுடன் பேசுங்கள். ரகசியங்களை பிறநபர்களிடம் பேசாதீர்.

**மிதுனம்:** உங்கள் அலட்சியத்தால் பணியில் குறைபாடு ஏற்படலாம். தீய நண்பர்களிடம் இருந்து விலகுவது நல்லது. விழிப்புணர்வு சகிப்புத் தன்மையுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள். பிள்ளைகளால் பெருமை கொள்வீர்கள். பொறுமை அவசியம்; பிறர் செயலைக் கண்டு எரிச்சல் அடையாதீர்கள். சமூகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**சிம்மம்:** ஆன்மிக விஷயங்களில் ஈடுபாடுகூடும். வேண்டுதல்கள் நிறைவேறும். வீட்டிலும், பணியிலும் பழைய நடைமுறைகளை மாற்றுவீர்கள். மேலதிகாரி மதிப்புடன் நடத்துவார்.

**கன்னி:** தகவல் தொடர்புகளின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். முயற்சிகள் நிறைவேறும். நட்பு வட்டம் விரிவடையும். உடல்நிலை சீராகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**துலாம்:** பொறுமை தேவைப்படும், குடும்பத்தில் பிணக்குகள் தீரும். திட்டமிட்ட நிகழ்ச்சிக்கு பதிலாக வேறு ஒன்று நடக்கலாம். கவனமாக இருக்கவும். திடீர் செலவுக்காக கைமாற்றாக பணம் வாங்க வேண்டி வரும்.

**விருச்சிகம்:** நீங்கள் பொது விஷயங்களில் ஈடுபட்டுப் பாராட்டு பெறுவீர்கள். உறவினர், நண்பர் மத்தியில் பாராட்டு கிடைக்கப் பெறுவீர்கள். எந்த விஷயத்திலும் கவனம்தேவை. நண்பர்களால் உதவியுண்டு.

**தனுசு:** மற்றவர் பிரச்சினையிலும் தலையிட்டு சிரமத்துக்கு ஆளாகலாம். மற்றவரை கேலி பேசவேண்டாம். விட்டுக்கொடுப்பது நல்லது. நீண்டநாள் கனவான வீடு வாங்கும் ஆசை நிறைவேற ஆரம்பிக்கும்.

**மகரம்:** மாற்று இனத்தவரால் நன்மை ஏற்படும். பழைய பகை தீரும். பணியிடத்தில் வழக்கத்துக்கு மாறாக அதிகமாக உழைப்பீர்கள். கஷ்டங்களிலிருந்து விடுபடுவீர்கள்.

**கும்பம்:** குழப்பம் நீங்கும். உற்சாமுடன் பணியாற்றுவீர்கள். முயற்சிகளில் மாற்றங்களைப் புகுத்தி முன்னேற்றம் காண்பீர்கள். சுயலாபத்துக்காக கொள்கைகளை மாற்றிக் கொள்வீர்கள்.

**மீனம்:** முக்கிய முடிவுகள் எடுக்க குடும்பத்தினரின் ஆலோசனை கிடைக்கும். உங்களால் குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். உடல்நிலை சீர்பெறும். புதிய தொழிலில் முதலீடு செய்வதில் கவனம் தேவை.

# 25 இலட்சம் அகதிகளை அரவணைத்த போலந்து

## ஷெலன்ஸ்கி நன்றி தெரிவிப்பு

கீவ், மார்ச் 14

உக்ரைனில் இருந்து வெளியேறிய சுமார் 25 லட்சம் அகதிகளுக்கு போலந்து அடைக்கலம் கொடுத்துள்ளது. இதற்காக உக்ரைன் அதிபர் ஷெலன்ஸ்கி போலந்துக்கு நன்றி தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உங்களை எவரேனும் துன்புறுத்தும் வேளையில் ஆறுதலாக சாய்ந்துகொள்ள ஒரு தோள் அவசியம் வேண்டும்.

எங்கள்மீது ரஷ்யா படையெடுத்தபோது, எமக்கு உதவிக்கரம் நீட்டியது போலந்து. சகோதரரே உங்களின் மக்கள் எதிரிகள் சூழத் தனித்துவிடப்படமாட்டார்கள் என்ற நம்பிக்கையை போலந்து எனக்கு அளித்தது. நீங்கள் எங்கள் மக்களை உங்கள் நாட்டின் குடும்பங்கள் வாயிலாக வரவேற்றுள்ளீர்கள்.

சகோதர பாசத்துடன் அவர்களை நடத்துகிறீர்கள். போலந்து சகோதர, சகோதரிகளே நாம் வலுவான பிணைப்பை உருவாக்கியுள்ளோம்- என்றார்.

(ம)

## உக்ரைனின் தலைநகரை சுற்றிவளைத்தது ரஷ்யா!

மொஸ்கோ, மார்ச் 14

உக்ரைனின் தலைநகர் கீவ், ரஷ்யப் படைகளால் சுற்றிவளை க்கப்பட்டுள்ளது. அங்கு தாக்குதல்கள் ரஷ்யாவால் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து வருகின்றது.

பல சுற்றுப் பேச்சுகள் நடத்தப்பட்டபோதிலும் உடன்பாடு எட்டப்படவில்லை. ரஷ்யாவின் மூர்க்கத்தனத் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன.

இந்தநிலையில் தலைநகர் கீவ்,ரஷ்யப் படைகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த நகரம் இன்னும் ஓரிரு நாள்களில் ரஷ்யப்படைகளால் முழுமையாகக் கைப்பற்றப்படலாம் என்று கருதப்படுகின்றது.

(ம)


31ஆம் நாள் நினைவு



மலர்வு 06 . 07 . 1945

உதிர்வு 12 . 02 . 2022

அமரர் ஜெயராணி அருளப்பு

(இராசாத்தி)

மயிலிட்டி

தாயாய் தந்தையாய் தனியொரு மரமாய் நின்று
ஏற்றமிகு வாழ்வு எமக்களித்த எம்தாயே - போற்றி போற்றி
பொறுமையால் யாவையும் வென்று
இறுதி வெற்றி கண்ட அன்னையே - போற்றி போற்றி
நித்திய வாழ்வு பெற நித்தமும் வேண்டுவோம்

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்



சிவமயம்

தசாக கிருகயக்ஞ அழைப்பு



அன்னை மடியில் 28.04.1930

ஆண்டவன் அடியில் 06.032022

கடந்த 06.03.2022 ஞாயிற்றுக்கிழமை
இறைபதம் அடைந்த
எமது அன்புத் தந்தையார்
பாரத்வாஜ கோத்திரம் பிரம்மஸ்ரீ
மு. பாலகுருசாமி சர்மா

அவர்களின் தசாகம் முதலான கிரியைகள் பின்வரும் திகதிகளில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி நாள்களில் அனைவரும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்.

- தசாகம் 15.03.2022 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி
- ஏகோதிஷ்டம், மாசிகம் 16.03.2022 புதன்கிழமை காலை
- சபிண்டீகரணம் 17.03.2022 வியாழக்கிழமை மு.ப 10.00 மணி
- கிருஹயக்ஞம் 18.03.2022 வெள்ளி பகல் 12.00 சமாராதனை

(இதனை தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.)

குடியிருப்பு, சுழிபுரம். (CS 43569) (4/6) குடும்பத்தினர்


# மூன்றாம் உலகப்போரை தூண்டுகின்றது ரஷ்யா!

## பைடன் குற்றச்சாட்டு



வொஷிங்டன், மார்ச் 14

ரஷ்யாவுக்கும் நேட்டோவுக்கும் இடையிலான மோதல்தான் மூன்றாம் உலகப்போர். ரஷ்யா மூன்றாம் உலகப் போரைத் தூண்டுகின்றது. அதை நாம் தடுக்கவேண்டுமென்று தெரிவித்தார் அமெரிக்க அதிபரான ஜோ பைடன்.

ரஷ்யா - உக்ரைன் மோதல் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐரோப்பாவில் உள்ள எங்கள் நட்பு நாடுகளுடன் நாங்கள் தொடர்ந்து ஒன்றாக நிற்போம். முழுப் பலத்துடன் நேட்டோ பிரதேசத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் பாதுகாப்போம், நேட்டோவைப் பலப்படுத்துவோம். உக்ரைனில் ரஷ்யாவுக்கு எதிராக நாங்கள் போரிடமாட்டோம். நேட்டோவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நேரடி மோதலே மூன்றாம் உலகப் போர். கிரம்ளின் மூன்றாம் உலகப்போரைத் தூண்டுகிறது.

அதைத் தடுக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். உக்ரைனில் ரஷ்யாவால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது. இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதற்காக ரஷ்யா கடுமையான விலைகொடுக்க நேரிடும்.

புடின் சண்டையின்றி உக்ரைனில் ஆதிக்கம் செலுத்தலாம் என்று நம்பினார், அவர் தோல்வியுற்றார். உக்ரைன் பிரச்சினையில் அமெரிக்க மக்களும் உலகமும் ஒன்றுபட்டுள்ளன - என்றார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டைக் கொண்டாடவே அமெரிக்கா செல்கிறார் பஸில்

### ஹேசா விதானகே குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 14

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதாகக்கூறி பிள்ளைகளுடன் புத்தாண்டைக் கொண்டாடப் போகிறார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லும் தேவை இருந்திருந்தால், இதற்கு முன்னர் சென்றிருக்கலாம். கொரோனாத் தொற்று நோய், பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளால் கடந்தமூன்று ஆண்டுகளாக நாட்டு மக்கள் புத்தாண்டைக் கொண்டாடவில்லை. இந்தநிலைமையில் பஸில் ராஜபக்ச தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் பாற்சோறு சாப்பிட அமெரிக்காவுக்குச் செல்கிறார். அவர் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடச் செல்லவில்லை -என்றார்.

(வ-இ)

## ஜனாதிபதி ஒருபொம்மை ஆட்டுவிக்கின்றார் பஸில்!

### முன்னாள் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

ஜனாதிபதி தற்போது பொம்மை, அதனை ஆட்டுவுக்கும் பொம்மலாட்டகாரன் பஸில் என்று முன்னாள் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த அரசால் தொடர்ந்தும் நாட்டை நிர்வாகம் செய்ய முடியாது. எனவே மக்கள் தற்போது புதிய சக்தியை உருவாக்கவேண்டும். வாக்களித்த 69 லட்சம் மக்களுக்கு மாத்திரமல்ல, சர்வதேசத்துக்கும் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் அரசு மீறியுள்ளது. அரசு ஒரு வாக்குறுதியையாவது நிறைவேற்றி இருந்தால் அதனை வெளியிட முடியும்.

ஜனாதிபதி தற்போது பொம்மை, அதனை ஆட்டுவிக்கும் பொம்மலாட்டகாரன் பஸில். மஹிந்தவும் புடலங்காய் நிலைமைக்குச் சென்றுள்ளார். ஜனாதிபதி மீது வைத்த நம்பிக்கையின் பாவத்தை தற்போது அனுபவித்து வருகின்றோம் -என்றார்.

(ம-4-இ)

# படுகுழியில் நாடு: பஸிலே காரணம்

### ஆட்சியைவிட்டு விலகினால்போதும் மக்கள் விடுதலை முன்னணி 'பளார்'

யாழ்ப்பாணம், மார்ச் 14

**நாட்டின் பொருளாதாரம் இன்று படுகுழிக்குத் தள்ளப்பட்டுள்ளமைக்கு, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவே காரணம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

என்றுமில்லாதவாறு நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலைமைக்குச் சென்றுகொண்டிருக்கின்றது. நாளுக்குநாள் பொருள்களின் விலையேற்றத்தால், சாதாரண மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. அதைப்பற்றி இந்த அரசு கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

ஏழு மூளைகளைக் கொண்ட பஸில், நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவார் என்று அவரை நிதியமைச்சர் ஆக்கினர்.

அவர் பதவியேற்ற பின்னரே கறுப்புச் சந்தையில் அமெரிக்க டொலர் 290 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது.

ஏற்றுமதிமூலம் கிடைக்கின்ற வருமானம் ஆயிரத்து 300 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்படுகின்ற நிலையில், வெளிநாடுகளுக்குச் செலுத்தவேண்டிய ஒரு மாதக் கடனின் வட்டி ஆயிரத்து 900 மில்லியன் டொலராகக் காணப்படுகின்றது.

நாட்டை முன்னேற்றப் போகிறோம் என்ற ராஜபக்சக்கள், நாட்டை அதல பாதாளத்துக்குத் தள்ளியுள்ளனர்.

கடந்த நல்லாட்சி அரசில் நாட்டை ஒரு பகுதியினர் சூறையாடிச் சென்ற நிலையில், தற்போதைய ராஜபக்சக்கள் நாட்டை வெளிநாடுகளுக்கு ஈடு வைத்துள்ளனர்.

இவர்கள் தங்களது இயலாமையை ஏற்றுக் கொண்டு, ஆட்சியில் இருந்து விலகுவதே மக்களுக்குச் செய்யும் உபாயம் -என்றார்.

(ம-4-20)



## நாட்டின் பொருளாதாரம்: பெரமுனவுக்கு விளக்கம்

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் தொடர்பில், பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்குத் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தமை தொடர்பில் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். பொருளாதார நிலைமை தொடர்பில் உறுப்பினர்களுக்கு நீண்ட விளக்கமளித்ததுடன், அவர்களின் ஆலோசனைகளையும் கேட்டறிந்தோம் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

(ம-4-இ)

## நெருக்கடியைப் புரிந்துகொள்ளும் அறிவு நிதியமைச்சருக்கு இல்லை

### உதய கம்மன்பில பகிரங்கத் தாக்குதல்



கொழும்பு, மார்ச் 14

குறைந்தளவு பொது அறிவு மட்டம் கொண்ட ஒருவரால் இத்தகைய நெருக்கடியான பொருளாதார நிலைமையை எவ்வாறு புரிந்துகொள்ள முடியும் என்று முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்மையில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த நிதியமைச்சர், 'கபுதாஸ் விமானத்தை தாக்கினார்' என்று தெரிவித்த கருத்துத் தொடர்பாக தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே உதய கம்மன்பில இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

இது சிரிக்க வேண்டிய விடயம் அல்ல. அழ வேண்டிய ஒன்று. மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாகச் செல்லும் பெண்களும், படகில் இத்தாலி செல்லும் இளைஞர்களும் அந்தநாடுகளின் மொழிகளில் விரைவில் தேர்ச்சி பெறுகின்றனர். நல்ல பொது அறிவு மட்டத்தைக்கொண்ட ஒருவரால் ஒரு மொழியை விரைவாகக் கற்றுக்கொள்ள முடியும். ஆனால், 17வருடங்கள் அமெரிக்காவில் வாழ்ந்த பஸில் ராஜபக்ச, அமெரிக்க மொழியின் பொது இலக்கணத்தை கையாள முடியாது இருக்கின்றார். அவரது பொது அறிவு மட்டம் மிகவும் ஆரம்ப நிலையில் இருப்பதையே இது வெளிப்படுத்துகின்றது. இவ்வளவு குறைந்த அறிவுத்திறன் கொண்ட ஒருவரால் இத்தகைய நெருக்கடியான பொருளாதார நிலையை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இத்தகைய முட்டாள்தனமான மனிதனால் எவ்வாறு பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியும் -என்றார்.

(எ-இ)

# ஒருவேளை உணவுக்காகவே பெரும் நெருக்கடியில் மக்கள்

### எதிரணி சுட்டிக்காட்டு

நாட்டின் தற்போதைய நிலைமையில் ஒருவேளை உணவைப் பெற்றுக்கொள்ளவே மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எரிபொருள் நெருக்கடி காரணமாக முழுநாடும் செயலிழந்துள்ளது. மின்சாரம் துண்டிக்கப்படுவதால் மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளனர். போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்புடன் இலங்கையில் அனைத்துப் பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது. மீன் உட்பட அனைத்துப் பொருள்களின் விலைகளும் நாம் எண்ணிப் பார்க்காத அளவுக்கு அதிகரிக்கும்.



நாட்டில் தற்போது காணப்படும் உணவு வீக்கம் மேலும் அதிகரித்து, மக்களுக்கு மூன்று வேளை அல்ல ஒருவேளை கூட சாப்பிட முடியாமல்போகும் நிலை உருவாகும் -என்றார்.

(ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்வெட்டுக் காரணமாக

## குளிரூட்டியிலுள்ள உணவுகளை அவதானமாக கொள்வனவு செய்க

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 14

வணிக வளாகங்களிலும் கடைகளிலும் குளிர்சாதனப் பெட்டிகளிலுள்ள உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

அவ்வப்போது ஏற்படும் மின்வெட்டு காரணமாக குளிர்சாதனப் பெட்டிகளில் உள்ள உணவின் தரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சில உணவுகள் பழுதடைந்துள்ளன.

எனவே, இவை தொடர்பில் நுகர்வோர் அவதானமாகச் செயற்படவேண்டும் என்று சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## தரமற்ற உணவு விற்பனை 387 பேர் மீது நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 14

சந்தையில் தரமற்ற உணவுகளை விற்பனை செய்த 387 விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நுகர்வோரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் கடந்த இரண்டு வாரங்களாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (ம)

## இரக்கமே இறை விருப்பம்

தவக்காலச் சிந்தனை

'உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள். இரக்கச் செயல்கள்தான் இறைவனுக்கு விருப்பமானவை. பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகின்றேன்' என்கிறார் கடவுள்.

நாம் அடுத்தவர்மீது இரக்கம் காட்டும்போது கடவுள் எம்மீது இரங்குவார். நாம் எந்த அளவையால் அளக்கின்றோமோ அதேஅளவையால் எமக்கும் அளக்கப்படும். பெறுவதைவிடக் கொடுப்பதில் இன்பம்காண வேண்டும்.

இரக்கம் இருப்பதெல்லாவற்றையும் கொடுக்கத் தயாராக இருக்கும். துன்பத்தில் துவண்டு துயருறுவோருக்கு ஆதரவாயிருக்கும். அன்னை தெரேசாவின் இரக்கச் செயல்கள்தான் அவரை புனிதர் நிலைக்கு உயர்த்தியது. கொடுக்கும்போது எதிர்பார்ப்பின்றி கொடுக்கவேண்டும். இரக்கம் சாதி, மத சம்பிரதாயங்களைக் கடந்ததாக இருக்கவேண்டும். பிரிவினைகள், பேதமைகளுக்கு இடமளிக்காது.

இரக்கமுள்ளவர் இதயம் ஏற்றத்தாழ்வுகளை வரையறை செய்யாது. அனைத்து மனிதர்களையும் சமமாக மதிக்கும். கடவுள் எமக்குக் கொடுத்திருக்கும் கொடைகள், செல்வம், சிறப்புக்கள் எல்லாம் பகிர்ந்து வாழத்தான். நாம் ஒருவருக்கு இரக்கம் காட்டும்போது இறைபிரசன்னத்தையே காட்டுகின்றோம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.

# ஊடகத் தணிக்கை அரசின் நோக்கமல்ல

மேற்பார்வை செய்வதற்கே பொறிமுறை

ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 14**

**ஊடக தணிக்கை தமது அரசின் கொள்கையல்ல எனவும் அவற்றை மேற்பார்வை செய்வதற்கான வழிமுறையை முன்னெடுக்கவுள்ளது -என்று ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது;-

வரலாற்றில் முதன் முறையாக பட்டய ஊடக கற்கைக்கான நிறுவனமொன்றை ஆரம்பிப்பதற்கான சட்டவரைவு தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதமளவில் பட்டய ஊடக நிறுவனம் உருவாக்கப்படும்.

பத்திரிகைப் பேரவை சட்டத்தை திருத்த 2021ஆம் ஆண்டு அமைச்சரவை அனுமதி கிடைத்தது. பல்வேறு அமைச்சர்கள் இதை மாற்ற முயற்சி செய்தனர்.

அமைச்சரவை முடிவுக்கமைய மக்கள் கருத்து பெறப்பட்டதோடு 22 பேர் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டில் குற்றவியல் சட்டத்தை நீக்க முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுத்த முடிவு ஊடகத்துறையில் வரலாற்று முக்கியமான தீர்மானமாகும்.

அரச தலைவர் உள்ளிட்ட சகல தரப்பும் இணைந்து ஊடகத்தை தணிக்கை செய்வது எமது முடிவல்ல, தணிக்கையன்றி மேற்பார்வை தமது கொள்கையாகும்.

சிவில் அமைப்புக்களுடன் இணைந்து மேற்பார்வை செய்யக்கூடிய வழிமுறையை முன்னெடுக்கப்படவுள்ளது -என்றார். (எ-இ)

## அரசிலிருந்து விலகாதிருக்க சுதந்திரக் கட்சி தீர்மானம்!

கொழும்பு, மார்ச் 14

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தில் இருந்து விலகாது இணைந்து செயற்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது என்று கட்சி வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

நாடு நெருக்கடியான நிலையில் உள்ள நேரத்தில் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவது ஏற்புடையதல்ல என்றும் இந்த நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றும் அந்தக்கட்சி கருதுகின்றது.

சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிலுள்ள 14 பேரில், பெரும்பான்மையானவர்கள் இந்தக் கருத்தையே கொண்டுள்ளனர் என்று கட்சி வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. எனினும், ஓரிரு உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேற விரும்புகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கு முன்பாக அமைந்துள்ள சங்கத்தின் தற்காலிகப் பணிமனையில் தற்போதைய தலைவர் ச.லலீசன் தலைமையில் மு.ப. 10 மணிக்கு நிர்வாகத் தெரிவு நடைபெறவுள்ளது.

குறித்த கூட்டத்தில் தமது வருடாந்த அங்கத்துவத்தைப் புதுப்பிக்க விரும்பும் அங்கத்தவர்களும் புதிதாக சங்கத்தில் இணைய ஆர்வமுள்ளவர்களும் கலந்துகொண்டு தமது அங்கத்துவத்தை உறுதி செய்து கொள்ளமுடியும். சங்கத்தின் ஆயுள் அங்கத்தவர்களுக்கான அங்கத்துவச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய)

## பேரீச்சம்பழத்துக்கான தடை விரைவில் நீக்கம்?

கொழும்பு, மார்ச் 14

பேரீச்சம்பழம் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் மாதம் முஸ்லிம்களின் ரமழான் நோன்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. பேரீச்சம்பழம் மீதான இறக்குமதி தடையால் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் தொடர்பாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கவனத்துக்குக் கொண்டுவந்ததை அடுத்து தடையை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்துள்ளார்.

பேரீச்சம் பழத்துக்கான தடையை நீக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதமர் பணித்துள்ளார் என்றும், இதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியாகும் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

## ஒட்றி றெபேறா நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், மார்ச் 14

மனித உரிமைச் செயற்பாட்டாளரும், சமூக நீதி ஆர்வலருமான ஒட்றி றெபேறா தொடர்பான நினைவுப் பேருரை யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

மனித உரிமைச் செயற்பாட்டாளரும், சமூக நீதி ஆர்வலருமான ஒட்றி றெபேறாவின் வாழ்க்கையையும் சமூக நீதியின் மீது அவர் கொண்டிருந்த பற்றுறுதியையும் நினைவு கொள்வதற்கும், அவை பற்றிச் சிந்திப்பதற்குமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு அருகிலுள்ள சென். ஜோன்ஸ் த பப்டிஸ்ற் தேவாலயத்தின் பரிஷ் மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு இந்த நினைவுப் பேருரை இடம்பெறவுள்ளது.

மனித உரிமைச் செயற்பாட்டாளரும், மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்க யாழ்ப்பாணத்தின் உறுப்பினரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் விரிவுரையாளருமாகிய கலாநிதி ராஜன் ஹூல், 'இறந்து பிறந்த ஜனநாயகம்: சுதந்திரத்தின்போது இலங்கை சமவுரிமையை நிராகரித்ததா?' என்ற தலைப்பில் பேருரையை நிகழ்த்தவுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அரசாங்கம்

# காற்று வலுத்திட்டத்துக்காக இந்திய நிறுவனத்துடன் ‘டீல்’

### வருகின்றது அதானியின் நிறுவனம்

**கொழும்பு, மார்ச் 14**

**இலங்கை மின்சாரசபை மன்னாரில் 500 மெகாவாட்ஸ் காற்று வலுத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவின் அதானி பசுமை சக்தி லிமிட்டெட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது.**

அதானி நிறுவனம் நிலைத்தகு சக்தி அதிகாரசபையுடனும் இலங்கை மின்சாரசபையுடனும் இணைந்து 3 மாத காலத்தினுள் ஒரு சாத்தியவள ஆய்வை மேற்கொள்ளுமென்றும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இட அமைவு இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. ஆனாலும், இது கடலிலும் நிலத்திலும் அமையக்கூடும்.

இந்த முதலீடு ஏறக்குறைய 500 மில்லியன் அமெரிக்க டொலராக அமைந்திருக்கும்.

இலங்கையில் அதானி நிறுவனத்தின் பிடி இறுகி வருகின்றது.

அந்த நிறுவனம் ஏற்கனவே இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையிலும், ஜோன்கீல்ஸ் ஹோல்டிங்ஸுடனும் கொழும்பு துறைமுகத்தில் மேற்கு கொள்கலன் முனைய அபிவிருத்தியில் இணைந்த தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி1)

## திரைப்பட பாணியில் பிக்கு கடத்தல்

கொழும்பு, மார்ச் 14

பிலியந்தலை மடபான பிரதேசத்திலுள்ள விகாரை ஒன்றில் தங்கியிருந்த பங்களாதேஷை சேர்ந்த பிக்கு ஒருவரை மஹரகமவில் வைத்து அடையாளம் தெரியாத நபர்கள் கடத்தியுள்ளனர்.

இந்தப் பிக்கு முறைப்பாடொன்றுக்கு சாட்சியமளிப்பதற்காக நேற்றுமுன்தினம் மஹரகமவுக்குச் சென்றபோது சிறிய ரக வாகனத்தில் வந்த குழுவால் கடத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அடையாளம் தெரியாத நபர்கள் பிக்குவின் முகத்தை மூடிக் கடத்திச் சென்று, பின்னர் பிக்குவை ஹாலி - எல பிரதேசத்தில் கைவிட்டுச் சென்றனர்.

அங்கிருந்த முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து, பிக்கு மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)

## மருத்துவபீட மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 14

2020 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றியவர்களில் மருத்துவ பீடத்துக்கு இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

புதிதாக 110 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர் என்று ஆணைக்குழுவின் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில் கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றிய உயிரியல் பிரிவு மாணவர்கள் ஆயிரத்து 974 பேர் மருத்துவ பீடத்துக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

2019 ஆம் ஆண்டில் மருத்துவ பீடத்துக்கு ஆயிரத்து 961 மாணவர்களும் 2018 ஆம் ஆண்டில் ஆயிரத்து 480 மாணவர்களும் இணைத்துக்காள்ளப்பட்டனர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் உயர்தரத்தில் தோற்றிய மாணவர்களில் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை 43 ஆயிரத்து 500 வரை அதிகரிக்கப்பட்டது. (எ-இ)



புலமைப்பரிசில்...

புலமைப்பரிசில் பரிட்சை இந்த ஆண்டு ஆரம்பத்தில் இடம்பெற்றிருந்த நிலையில், பரீட்சை பெறுபேறுகள் நேற்று முன்னிரவு வெளியாகின. பரீட்சை முடிவுகளை https://www.doenets.lk/ என்ற இணையத்தளத்தில் சென்று பார்வையிட முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (ஒ-இ)

## தேசிய மட்டத்தில் முதலிடம் மாணவிக்கு மதிப்பளிப்பு

சாவகச்சேரி, மார்ச் 14

‘தாய் நாடு: தாய் மொழி’ என்ற கருப்பொருளில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம்பெற்ற சாவகச்சேரி மகளிர் கல்லூரி உயர்தர கலைப்பிரிவு மாணவி பத்மநாதன் வைஷ்ணவி, பிரதமர் மஹிந்த தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தேசிய ரீதியிலான தாய்மொழித் தினப் போட்டியில் கவிதைப் பிரிவில் அவர் முதலிடம் பெற்றார். மாணவிக்கான சான்றிதழையும் பணப்பரிசையும் அமைச்சர் தினேஷ் குணவர்தன வழங்கிக் கௌரவித்தார். குறித்த மாணவிக்கு பாடசாலைச் சமூகமும் மற்றும் தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனையும் [illegible] வாழ்த்தையும் [illegible] (ம-14)

## வீதி புனரமைப்பு தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

காரைநகர் பிரதேசசபைக்குச் சொந்தமான பத்தர் கேணி வீதியும் அதோடு இணைந்த வாய்க்கால் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்கு வீதி அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

காரைநகர் பிரதேசசபைத் தவிசாளர் ம.அப்புத்துரை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உபதவிசாளர் ஆ.விஜயராஜா, சபையின் உறுப்பினர்கள், கிராம அலுவலர், சபையின் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-14-50)


பாராட்டி வாழ்த்துகின்றோம்




2021 ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் **170 புள்ளிகள்** பெற்று பாடசாலைக்கும் எமக்கும் பெருமை சேர்த்த **சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை** மாணவன் செல்வன்

**பாஸ்கரன் ஆரூரன்**

அவர்களை மனதாரப் பாராட்டுவதுடன் எதிர்காலத்தில் பலகலையும் பெற்று பல்லாண்டு காலம் நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

இவர் சிறந்த பெறுபேறுகள் பெற ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகின்றோம்

**வாழ்த்துவோர்:-**

**தாத்தா பொ.சிவலிங்கம்,**
**அம்மம்மா சி.[illegible]மணி,**
**குட்டிமாமா சி. சிவறாஜன்,**
**அத்தை சி.விஜிதா,**
**மச்சான்மார். சி.சாய்கரன், சி. அபிகரன்**

**சித்தன்மாவடிப் பிள்ளையார் வீதி, கல்வயல், சாவகச்சேரி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பி.சி.ஆர்...

என்று பதில் பணிப்பாளர் மருத்துவர் மு.நந்தகுமார் தெரிவித்தார்.
பி.சி.ஆர். பரிசோதனை நடவடிக்கைகளிலிருந்து மருத்துவர்கள் விலகுவதாக கடிதம் மூலம் அறிவித்துள்ளனர். அதன் காரணமாக வெளிநாடு செல்வோருக்கு மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகள் இன்றுமுதல் மறுஅறிவித்தல் வரையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் முன்னெடுக்கப்படாது - என்றார். (ஒ-5-110)

## கோத்தாவுடன்...

அந்தக் கட்சியின் மத்திய குழு இது தொடர்பில் நேற்றுமுன்தினம் சூம் தொடர்பாடல் மூலம் கலந்துரையாடல் நடத்தியுள்ளது. அந்தக் கூட்டத்தில், ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்கேற்பதில் தவறில்லைஎன்றகருத்தே முன்வைக்கப்பட்டதாக அறியமுடிகின்றது.
நாளை செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதில் எடுக்கப்படும் முடிவுக்கு அமைவாக புளொட் செயற்படும்.
இதேவேளை- இந்தச் சந்திப்பில் பங்கேற்கவேண்டுமாயின் அரச தரப்பில் சில நல்லெண்ண சமிக்ஞைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள ரெலோ, சந்திப்பில் கலந்து கொள்ளாதிருக்க தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## வடக்கில்...

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2 ஆயிரத்து 299ஹெக்ரேயர் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் 2019ஆம் ஆண்டே சுவீகரிக்கப்பட்டுள்ளன.
கிளிநொச்சி மாவட்டத்தில் 53 ஆயிரத்து 852ஹெக்ரேயர் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இதில் 6 இடங்கள் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுவீகரிக்கப்பட்டுள்ளன.
மன்னார் மாவட்டத்தில் 73 ஆயிரத்து 362ஹெக்ரேயர் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இதில் 8 இடங்கள் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுவீகரிக்கப்பட்டுள்ளன.
முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 253 ஹெக்ரேயர் சுவீகரிக்கப்பட்டுளளது. இதில் 10 இடங்கள் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுவீகரிக்கப்பட்டுள்ளன.
வவுனியா மாவட்டத்தில் 72 ஆயிரத்து 940 ஹெக்ரேயர் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இதில் 7 இடங்கள் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுவீகரிக்கப்பட்டுள்ளன.
வனவளத்திணைக்களம் வழங்கிய தகவலில் சுவீகரிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 152 ஹெக்ரேயரும், வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 25 ஹெக்ரேயரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 595 ஹெக்ரேயரும், மன்னார் மாவட்டத்தில் 516 ஹெக்ரேயரும் உள்ளடங்குகின்றன. (அ-ஒ-5)

## கொக்குவில்...

வெளியிடப்பட்டன. அதனடிப்படையில் உத்தியோகபூர்வமாக வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட பெறுபேறுகளில் யாழ்ப்பாணம்கல்வி வலயப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் தமிழ்ச்செல்வன் கஜலக்ஸன் 198 புள்ளிகளைப் பெற்று முன்னணியில் உள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான வெட்டுப்புள்ளியாக 148புள்ளிகள்வழங்கப்பட்டுள்ளன.
கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களின் தர வரிசை வெளியிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)


**A/L CHEMISTRY**

PaperClass Centre
Day Class- Physical
2022- Inorganic
2023- Calculation

(CS 43566) (4/6)

Mr.S.Sureshkumar Bsc (Hons) PGDE
Brown Road, Jaffna 077 555 9028 Kondavil, Jaffna



**பொதுக்கூட்ட அழைப்பு**

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையினுடைய வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவும் 10.04.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறும் என்பதனை பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
மேற்படி கூட்டத்திற்கு பிரேரணை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் நேரில் அல்லது தபால் மூலம் 20.03.2022 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(CS 43570 (4/6)

சு.கபிலன் (செயலாளர்)
தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் வது



**Personal Class**

தரம் 6 முதல் O/L வரையான மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் & A/L மாணவர்களுக்கு பொருளியல், வணிகக்கல்வி, பௌதீகவியல், இரசாயனவியல் உட்பட அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படும்.

(CS 43567) (4/6) 074 289 0181


# 12 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

## அமரர் சவரிமுத்து தேவசகாயம்



மண்ணில் 08.02.1923 — விண்ணில் 14.03.2010

தேவன் எமக்களித்த சகாயமே எங்கள்பப்பா
தேவசகாயம் அவர் காட்டிய வழியில் நடப்பதால் நாம்
என்றும் தடுமாறியதில்லை இறை விசுவாசத்தில்
வாழ்ந்த நீங்கள்எம்மையும் அதே வழியில் வாழ
முன்மாதிரியாய் இருந்தீர்கள்
இறை அமைதியில் வாழும் நீங்கள்
எமக்காக இறைவனை வேண்டுவீர்கள் என்று
எமது நம்பிக்கை

இல. 28, றக்கா வீதி,
சுண்டிக்குளி.

என்றும் பசுமை நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் , பூட்டப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய
உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி சுரேஷ் குயிலினி**
அவர்களின் அன்புத்தாய்
**யோகரத்தினம் கமலசிங்கம்**
அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிச் சங்கம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய
உத்தியோகத்தராக கடமையாற்றும்
**செல்வி சத்தியா சரவணமுத்து**
அவர்களின் அன்புத்தந்தை
**கணபதிப்பிள்ளை சரவணமுத்து**
அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிச் சங்கம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 14 . 08 . 1963
விண்ணுலகில் 23 . 02 . 2021

## குருநாதன் பிரபாகரன்

திதி: மாசிபூர்வபக்க ஏகாதசி (14.03.2022)

எமது அன்புத் தெய்வம் பிரபாவே!
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உன்னுடைய நினைவலைகள்
இன்னும் பசுமையாக எமது உள்ளங்களில் நிறைந்தே உள்ளன
உன்னுடைய சிரித்த முகம்.
கலகலப்பான பேச்சு,
சுறுசுறுப்பான செய்கைகள்
காணாது ஏங்குகின்றோம்
நாம் இங்கே.
உனது எதிர்பார்ப்புகள்
[illegible] நிறைவேறும்
உனது [illegible] ஆத்மா
[illegible] இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

# மரண அறிவித்தல்



## கந்தசாமி சாந்தகுமார்

மீசாலையை பிறப்பிடமாகவும் பிரான்ஸ், உடையார்கட்டு சுதந்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சாந்தகுமார் நேற்று (13.03.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் கந்தசாமி இந்திராணி தம்பதிகளின் புதல்வனும், சிவனேஸ்வரன் குணசாந்தி தம்பதிகளின் மருமகனும், ராதிகாவின் அன்புக்கணவரும், அமரர் தயாபரன் மற்றும் அனிற்றா, மரியதாஸ் ஆகியோரின் அன்புச்சகோதரனும், லிங்கேஸ், குழலினி ஆகியோரின் அத்தானும், விமலாதேவியின் (தேவி-மண்டுவில்) அன்பு மருமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2022) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு சுதந்திரபுரம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுதந்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் [illegible]

[illegible]
மீசாலை

(CR 37664) (4/6)

தகவல்
த.கந்தசாமி (தந்தை)
076 089 6655

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழில் **No.1** ஆங்கிலப்பயிற்சி மையம்

**DIPLOMA IN ENGLISH**
**SPOKEN ENGLISH**

Reading Writing Speaking Listening

ENGLISH Foundation | ENGLISH Part 1 | ENGLISH Part 2




நேரடி வகுப்பு
புதிய பிரிவுகள் ஆரம்பம்
16/3/2022
பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்

Call now
0777173517

புதிய பிரிவுகள் ஆரம்பம் — உங்கள் முழுமையான ஆங்கிலப்புலமைக்கு

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | கிளிநொச்சி Sat,Sun -9:00 a.m. |
|---|---|---|---|
| Mon,Wed,Fri- 8 :00 a.m.<br>Mon,Wed,Fri- 3:00 p.m.<br>Sat,Sun - 3:00 p.m. | Tue,Thu - 3:00 p.m.<br>Sat,Sun - 3:30 p.m. | Mon,Wed,Fri- 1 : 00 p.m. | சாவகச்சேரி Tue,Thu - 9:30 a.m.<br>சண்டிலிப்பாய் Mon,Wed,Fri- 11:30 a.m. |

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

**IELTS**
# Unique Test Tips
# 40 hrs with free 4Mock exams
# Latest course Material ( Book 16)

**IELTS Life Skills A1**
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

# DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் அருகாமை காளி கோவில் முன்பாக) நெல்லியடி 021 226 2470 | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) சாவகச்சேரி 021 227 0775 | No.130,கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) சுன்னாகம் 021 224 1970 | சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் 021 225 6665 | No.113, A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி மைதானம் முன்பாக) கிளிநொச்சி 021 228 5655 |
|---|---|---|---|---|



## ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் - நயினாதீவு
## SRI NAGAPOSHANI AMMAN KOVIL - NAINATIVU

### கூறுவிலை கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் தேரடி அர்ச்சனை மண்டப கட்டுமானத்திற்கான கூறுவிலை அறங்காவலர் சபையினால் கோரப்படுகின்றது. தகைமையுடையவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து வேலையினைப் பார்வையிட்டு கூறுவிலை படிவக்கட்டணமான ரூபா 1000.00 பணத்தினை செலுத்தி கூறுவிலைப்படிவத்தை பெற்று. பூரணப்படுத்தி 2022.03.20 ஆம் திகதி பி.ப. 5.00 மணிக்கு முன்னர் ஆலயத்திற்கு கிடைக்கக் கூடியதாக "செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு" எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ. அல்லது கோயில் நிர்வாக பணிமனையில் வைக்கப்பட்டுள்ள "கூறுவிலை கோரல்" பெட்டியினுள் இடப்படவேண்டும்.

**குறிப்பு :-**
1. பதிவுபெற்ற ஒப்பந்தகாரராக இருத்தல் வேண்டும்.
2. ஆலய கட்டுமான வேலைகளில் முன் அனுபவம் இருத்தல் வேண்டும். இவற்றுக்கான சான்றிதழ்களின் பிரதி கூறுவிலையுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்

(CR.37665) (4/6)

திரு.ந.மோகனரூபன் - செயலாளர், அறங்காவலர் சபை.
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில், நயினாதீவு

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்





தோற்றம் 17-09-1972 — மறைவு 14-03-2017

### அமரர் டெல்வின் டெறிற்றா சுகுணதாஸ்

காலங்களில் கனவாகிப் போனீர்
எம் கண்ணீர் துளிகளின் ஈரம் இன்னும் காயவில்லை
வருடங்கள் நீண்டு கொண்டு இருக்கின்றது.
நீரின்றிய தனிமையில்,
வெளிப்பூசும் புன்னகை சொல்ல
தவறவில்லை உள் மன அழுகையை.
ஐந்தாண்டு ஓடிவிட்டது அமைதியை பறித்து
உயிரோடு கலந்திட்ட உம் நினைவு
எம் வாழ்நாள் முழுதும் தொடர்கதை
விதியிடம் எழுத சொல்லுங்கள்
உமக்கும் எமக்குமான பயணம்
ஏழேழு ஜென்மங்கள் தொடரும் என்று

18/1 ஆசீர்வாதம் லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS 18840) (3/6)

"சீராருஞ் சுழிபுரத்துப் பத்திரகாளித்தாயைத் திடங்கொண்டு
சிந்தித்திருப்போர்க் கொரு தீதில்லை யிப் பாரினிலே"

## சுழிபுரம் அருள் மிகு வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

# வருடாந்தப் பொங்கல் உற்சவம்



எல்லாம் வல்ல தாயாகிய பத்திரகாளி அம்பாளுடைய வருடாந்தப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு **நாளை (15.03.2022) செவ்வாய்க்கிழமை மாலை "விளக்கு வைத்தல்"** வைபவம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து **எதிர்வரும் (22.03.2022) செவ்வாய்க்கிழமை முதலாம் பொங்கலும் (பெரியவேள்வி) 29.03.2022 செவ்வாய்க்கிழமை எட்டாம் மடையும் அப்பாளுடைய திருவருளால் நிகழுப்பெறும்** என்பதை **அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.**

**குறிப்பு:** பொங்கல் உற்சவ காலங்களில் வியாபாரங்களை நடத்த விரும்புவோர் எதிர்வரும் **(20.03.2022) பிற்பகல் 4.00 மணிக்கு** வருகை தந்து தங்களுக்குரிய இடங்களை உரிய நடைமுறைப்படி ஆலய பரிபாலன சபையினரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

**அம்பாளுடைய திருவருட் பணியில்**
**தேவஸ்தான பரிபாலன சபையினர்**

(cs.43487) (2.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்
## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.
## சபைநிதி வேலைத்திட்டங்கள் - 2022

1. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம், அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்ட வணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. ஒப்பந்ததாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule -5) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர்/ செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2022.03.14 தொடக்கம் 2022.03.28 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09:00 மணி முதல் 16:00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரியில் 2022.03.14 ஆம் திகதியிலிருந்து 2022.03.28 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக்கும் மாலை 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தவிசாளா/ செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு 2022.03.28 ஆம் திகதி மாலை 14:30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கீழ் காட்டப்படும் கேள்விகள், கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து தொடர் இலக்கம் 7, 9, 11, 12 வரையான வேலைகளுக்கு 49 நாட்கள் (2022.05.14 ) வரையும் தொடர் இலக்கம் 1, 2, 3, 4, 5, 6, 8, 10 வரையான வேலைகளுக்கு 63 நாட்கள் (2022.05.28) வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2022.03.21 திகதி மாலை 15:00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.
11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.


| தொடர் இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப் படும்தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/41/(6)/2/C. F/2022/01,02,03 | கிராமசபை 18 ஆவது வீதி மீள் நிர்மாணம் - கொடிகாமம் மத்தி<br>கண்ணகி அம்மன் வீதி / காளிகோவில் வீதி 5 ஆவது வீதி மீள் நிர்மாணம் - கொடிகாமம் மத்தி<br>கடற்கரை வீரபத்திரர் கோவில் வீதி மீள்நிர்மாணம் - கெற்பெலி | 3.18 | 90 | C8/C7 (வீதி நிர்மாணம்) | 32,000.00 | 2022.06.24 |
| 2 | NP/14/41/(6)/2/C. F/2022/04,05,06 | தாளையடி அம்மன் கோவில் வீதி இணைப்பு வீதி - 1 மீள்நிர்மாணம் - அல்லாரை<br>ஆத்தியடி வீதி மீள்நிர்மாணம் - கொடிகாமம் மத்தி<br>கிராமசபை 18 ஆவது வீதி நாகநாதன் இணைப்பு வீதி மீள் நிர்மாணம் (நாகநாதன் வீதி 15 ஆவது வீதி ) - கொடிகாமம் தெற்கு | 2.76 | 90 | C8/C7 (வீதி நிர்மாணம்) | 28,000.00 | 2022.06.24 |
| 3 | NP/14/41/(6)/2/C. F/2022/07,08,09 | வேவில் மயான வீதி (ஐயனார் கோவில் வீதி ) மீள்நிர்மாணம்.<br>கச்சாய் வெள்ளம்போக்கட்டி ஊரெல்லைவீதி மீள்நிர்மாணம்<br>பாதாள வைரவர் கோவில் வீதி மீள்நிர்மாணம் - கச்சாய் | 2.72 | 90 | C8/C7 (வீதி நிர்மாணம்) | 28,000.00 | 2022.06.24 |
| 4 | NP/14/41/(6)/2/C. F/2022/10,11 | வரணி பாடசாலை இறத்திக்குள இணைப்பு வீதி புனரமைப்பு (பள்ளம்பெருமாள் குள வீதி) - வரணி இயற்றாலை<br>வைத்தியசாலை தெற்கு வீதி புனரமைப்பு - கரம்பைக்குறிச்சி | 2.72 | 90 | C8/C7 (வீதி நிர்மாணம்) | 28,000.00 | 2022.06.24 |
| 5 | NP/14/41/(6)/2/C. F/2022/12,13,14 | கோணாவளை வீதி புனரமைப்பு - மந்துவில் மேற்கு<br>பாம் வீதி 2ஆம் குறுக்கு வீதி புனரமைப்பு - மந்துவில் மேற்கு.<br>கரன் வீதியில் Box Culvert நிர்மாணம் - தாவளை இயற்றாலை | 2.01 | 90 | C8/C7 (வீதி நிர்மாணம்) | 20,500.00 | 2022.06.24 |
| 6 | NP/14/41/(6)/2/C. F/2022/15,16,17 | வாகையடி 3 ஆவது குறுக்கு வீதி (கண்டல்காடு வாகையடி இணைப்பு வீதி ) நிர்மாணம் - மட்டுவில் தெற்கு<br>பொற்கொல்லர் 1 ஆம் குறுக்கு வீதி நிர்மாணம் - மட்டுவில் கிழக்கு<br>குன்றுப்பள்ள 1 ஆம் குறுக்கு வீதி நிர்மாணம் - கைதடி நுணாவில் | 2.75 | 90 | C8/C7 (வீதி நிர்மாணம்) | 28,000.00 | 2022.06.24 |
| 7 | NP/14/41/(6)/2/C. F/2022/18,19,20 | கட்டைப்பறிச்சான் வீதி புனரமைப்பு - கைதடி தெற்கு<br>குமரநகர் சனசமூக நிலைய 1 ஆம் குறுக்கு வீதி புனரமைப்பு - கைதடி மத்தி<br>இந்தனை வீதி புனரமைப்பு - கைதடி கிழக்கு | 1.79 | 90 | C9/C8 (வீதி நிர்மாணம்) | 18,000.00 | 2022.06.10 |
| 8 | NP/14/41/(6)/2/C. F/2022/21,22,23 | 5 வீட்டுத் திட்டம் 3 ஆவது வீதி மீள்நிர்மாணம் - நாவற்குழி மேற்கு<br>5 வீட்டுத் திட்டம் வீதி 2 ஆவது வீதி 2 ஆவது தெரு மீள்நிர்மாணம் - நாவற்குழி மேற்கு<br>300 வீட்டுத் திட்டம் வீதி மீள்நிர்மாணம் - நாவற்குழி மேற்கு | 2.38 | 90 | C8/C7 (வீதி நிர்மாணம்) | 24,000.00 | 2022.06.24 |
| 9 | NP/14/41/(6)/2/C. F/2022/24,25 | பூமரக் கிணற்றடி வீதி மீள்நிர்மாணம் - மறவன்புலோ<br>கைதடி நாவற்குழி 1 ஆம் தெரு மீள்நிர்மாணம் | 1.85 | 90 | C9/C8 (வீதி நிர்மாணம்) | 18,500.00 | 2022.06.10 |
| 10 | NP/14/41(6)/2/C.F /2022/26 | வீரபத்திரர் கோவில் வீதி நிர்மாணம் - மட்டுவில் மத்தி | 2.17 | 90 | C8/C7 (வீதி நிர்மாணம்) | 22,000.00 | 2022.06.24 |
| 11 | NP/14/41(6)/2/C.F /2022/27 | அப்பக்கொட்டில் 2 ஆவது குறுக்கு வீதி (சீமாவளவு வீதி ) மீள் நிர்மாணம் - இராமாவில் | 0.6 | 90 | C9/C8 (வீதி நிர்மாணம்) | 6,000.00 | 2022.06.10 |
| 12 | NP/14/41(6)/2/C.F /2022/28 | ஊரெல்லை வாய்க்கால் Box Culvert நிர்மாணம் - மெய்கண்டான் வீதி சரசாலை தெற்கு | 0.67 | 90 | C9/C8 (வீதி நிர்மாணம்) | 7,000.00 | 2022.06.10 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**
2022.03.14

(cr 8051) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
20
06
1939



மறைவு
10
03
2022

## மயில்வாகனம் சந்திரசிங்கம்

சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சந்திரசிங்கம் கடந்த (10.03.2022) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம், சண்முகராசா, செந்திநாதன், சிவபாக்கியம் மற்றும் புஸ்பதேவி (சுன்னாகம்) ஆகியோரின் சகோதரரும், மேனகா (பிரான்ஸ்), யமுனா (லண்டன்), சுமிதா (லண்டன்), லெனின் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), ஸ்ரீரஞ்சன் (லண்டன்), ஸ்ரீமுருகன் (லண்டன்), ஜெனிதா (கனடா), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மகிராம், மாருசன், டிலானி, டிசான், திபிகா, பிரவீன், திசானா, துசானிக்கா, டானிக்கா, டனுசன் ஆகியோரின் அன்புப் பேரனும், பவளராணி, புஸ்பராணி, வசந்தகுமார், காலஞ்சென்ற வைஜயந்திக்குமார் (சிவா) மற்றும் கமலராணி, ஜெயராணி ஆகியோரின் மைத்துனரும், இராமலிங்கம், சிவன்செயல், நந்தினி, நீனாரவி, நிமலன், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, செல்வராசா மற்றும் வேதநாயகம், திருநாவுக்கரசு ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**பெரியமதவடி,**
**சுன்னாகம் தெற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 300 2125**

(CS 43562) (4/6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
04
03
1934



மறைவு
08
03
2022

## திரு. நவரட்ணம் தியாகராசா (தியாகு அண்ணா)

யாழ். அரியாலை நீர்நொச்சித்தாழ்வைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் தியாகராசா அவர்கள் கடந்த (08-03-2022) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நவரட்ணம் பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அருமைரத்தினம் தம்பதிகளின் மூத்த மருமகனும், சபிதாமலர் அவர்களின் அன்புக் கணவரும், வித்யா, அமுதா, காலஞ்சென்ற கன்யா, அகல்யா, வத்சலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செந்தில்ராஜன், சுகந்தன், சத்தியேந்திரா, விநோதா ஆகியோரின் அருமை மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, அருள்(கிளி Teacher), சண்முகராசா(சந்திரா) மற்றும் பரமேஸ்வரி(ராணி), யோகராசா(குஞ்சு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு, துரைசாமி மற்றும் மஹாலக்ஷ்மி, குணம், சரஸ்வதி, மகேந்திரா, சந்திரபவானி(சாந்தி), கலாநிதி(கலா- Nurse), யோகராசா(ராசன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராகவி, சந்தீப், நிருபன், நிருஷா, கேசவன், வருண், கேசவி, சாம்பவி, தரண்யா, திவ்யன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2022) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல. 54,**
**அருளம்பலம் வீதி,**
**அரியாலை.**

**தகவல்:**
**திருமதி பரமேஸ்வரிகுணம் (சகோதரி)**
**077 752 7231**

(CS 43569) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய...

தெரிவித்தார்.

வடக்கு மாகாண மீனவர்களுக்கான உதவிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா உங்களின் சகோதர நாடு. அதற்காக என்றும் அக்கறையுடன் நாம் செயற்படுவோம். கொரோனாவால் இங்கும், இந்தியாவிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டன. இரண்டு நாடுகளும் அதிலிருந்து மீள்வதற்கு போராடுகின்றன

இன்று வழங்கப்படும் உதவி வெறும் ஆரம்பம் மட்டுமே. இதனை நாம் எதிர்காலத்தில் இன்னும் விரிவாக்குவோம்.

வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் தூதுக்குழு என்னை கொழும்பில் சந்தித்தது. உங்களின் பிரச்சினை பேச்சின் ஊடாக தீர்க்கப்படவேண்டும்.

**கலாசார மண்டபம் திறப்பு**

இந்திய நிதியுதவியில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கலாசார மண்டபம் வெகு விரைவில்திறக்கப்படும். இலங்கை அரசின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளோம். இந்த கலாசார மண்டபம் யாழ்ப்பாண மக்களுக்கானது - என்றார்.

**மன்னார் நிகழ்வு நிறுத்தம்**

மீனவர்களுக்கான உதவித் திட்டம் வழங்கலில், யாழ்ப்பாண மாவட்டத்தைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்திலும் நேற்று மாலை முன்னெடுக்கப்படவிருந்தது. இருப்பினும் நேற்றுமுன்தினம் இரவு அந்த நிகழ்வு திடீரென ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில், 600 மீனவக் குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (அ-ஓ-26)

## 'இலங்கை...

மருந்துகள், எரிபொருள், உணவு உள்ளிட்ட தேவைகளுக்கான பற்றாக்குறை இலங்கையில் நிலவுகின்றது. எரிவாயு, எரிபொருள் என்பனவற்றுக்கு மக்கள் நீண்டவரிசைகளில் உள்ளனர். மின்தடை நாட்டில் உள்ளது என்று பிரிட்டன் தனது எச்சரிக்கை குறிப்பில் தெரிவித்துள்ளது. (அ-ஓ-இ)

## எரிபொருளின்...

கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

டீசல் லீற்றருக்கான நஷ்டம் 120 ரூபா என்ற போதிலும் ஒரு லீற்றர் டீசல் 55 ரூபாவால் மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக அதிகரித்துள்ள எரிபொருள் விலைகள் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசலுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை மட்டுமே ஈடுசெய்யும்.

40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை இறக்குமதி செய்வதற்கு முன்னர் 32 மில்லியன் டொலர் செலவிடப்பட்டது. உலக எரிபொருள் விலையேற்றம் காரணமாக 51 மில்லியன் டொலராக அது அதிகரித்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் பழைய விலைக்கே எரிபொருளை விற்பனை செய்திருந்தால் இந்த மாதம் 26 பில்லியன்ரூபா நஷ்டம்ஏற்பட்டிருக்கும் - என்றார் சுமித் விஜேசிங்க. (அ-ஓ-இ)

## விலை...

பேருந்துக் கட்டணங்களையும் இன்று நள்ளிரவு முதல் அதிகரிக்கவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொள்கலன் போக்குவரத்துக்கான கட்டணத்தை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் 60 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக, கொள்கலன் வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. துறைமுகங்களிலிருந்து இறக்கப்படும் பொருள்கள் நாடு முழுவதும் கொள்கலன்களில் கொண்டு செல்லப்பட்டே விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-இ)

## 'வரிசையுகம்'...

உலகஅரங்கில்ஏற்பட்டுள்ளசூழ்நிலையை கட்டுப்படுத்த முடியாமல் அரசு திணறுகிறது என்று தெரிவித்தார்.

உலகளாவிய பொருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நாட்டுக்கு டொலரைக் கொண்டு வருவதற்கு தேங்காய்களை விற்க முடியாது. டொலரைக் கொண்டுவருவதிலுள்ள சிரமத்தின் ஆரம்பக்கட்டத்தில் உள்ளோம். சுற்றுலாத்துறை மற்றும் ஏற்றுமதியை பலப்படுத்துவதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஜனாதிபதி முயற்சிக்கின்றார். தற்போதையபிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு அரசுக்கு குறைந்தது ஏழு முதல் எட்டு மாதங்கள் எடுக்கும் - என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-ஓ-இ)

## அள்ளிக்...

தும் மேற்கொள்ளப்படும் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மன்னார் தொடக்கம் பூநகரி வரையிலான கடற்கரைப் பிரதேசத்தில் அதானி குழுமம் காற்றாலை மூலமான மின் உற்பத்திக்கு முதலீடு செய்யவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதேபோன்று சம்பூரில் புதுப்பிக்கதக்க சக்தி மூலமான மின் உற்பத்திக்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை கோரிய கடன் உதவியை வழங்குவதற்கு இந்தியா நிபந்தனைகளை விதித்திருந்தது. குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தனது ஆதிக்கத்தை உறுதி செய்யும் வகையில் பொருளாதார மூலோபாயத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தது.

அதற்கு அமைவாக இலங்கை அரசும் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இதனால் அடுத்த வாரம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுடன், ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவிக்கான ஒப்பந்தத்தை இந்தியா மேற்கொள்ளும் என்று தெரியவருகின்றது. (அ-ஓ-5)

## தமிழர்களின்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.



13 ஆவது திருத்த சட்டத்துக்கு எதிராக வவுனியா, தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மக்கள் பேரணியின் முடிவில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**சாப்பாட்டுக்கே சவால்**

எமது அன்றாட வாழ்க்கையில் இருக்கின்ற சுமைகளைப் பற்றி யோசிக்கின்ற தருணத்தில், வவுனியா மாவட்டத்தின் எல்லா இடங்களிலும் இருந்து மக்கள் வருகை தந்தமை ஒரு ஆறுதலையையும், நம்பிக்கையையும் கொடுத்திருக்கிறது. எமது குடும்பங்களுக்கு அடுத்த நேர சாப்பாடே திண்டாட்டமாக இருக்கின்றது. விலை அதிகரிக்கின்ற ஒரு காலகட்டம். அனைத்து விடயங்களிலும் சுமைகள் கையை மீறி தலைக்கு மேல் அழுத்திக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் நாங்கள் இந்த விழிப்புணர்வு பேரெழுச்சியை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

இன்று ஒரு லீற்றர் பெற்றோல் விலை அதிகரித்துவிட்டதாகவும், சாப்பாட்டு விலை கூடி விட்டதாகவும் கொந்தளிக்கிறார்கள். ஆனால், அந்த மக்கள் பாவம். அவர்களுக்கு இருக்கக் கூடிய நிலையில் அது மிகப்பெரிய சுமை. ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரை உரிமைக்காகப் போராடிய ஒரேயொரு காரணத்துக்காக எங்களது தாயக நிலப்பரப்பில் பொருளாதாரத் தடைகளை விதித்து தசாப்தங்களாக எங்களது மக்களது வாழ்க்கையை நசித்தார்கள். இன்று தெற்கில் கொந்தளிக்கும் மக்கள் 20 வருடங்களுக்கு முதல் அதாவது 2001 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒரு லீற்றர் பெற்றோல் ஆயிரத்து 500, 2 ஆயிரம் ரூபாவாக இருந்தது. ஆனால் அப்போதும் எங்களுடைய மக்கள் இந்தச் சுமைகளை தாங்கிக்கொண்டார்கள்.

**நம்பமறுக்கும் சிங்களவர்கள்**

தமிழ் மக்கள் மீது செலுத்திய கொடுமைகள் நூற்றில் ஒரு பங்காவது இன்று சிங்கள மக்களுக்கு ஏற்பட்டுள்ளமை அவர்களது கண்களை திறக்க வைத்துள்ள ஒரு காலகட்டம். தங்களது தலைவர்கள் தங்களை ஏமாற்றி விட்டார்கள் என்ற நிலைக்கு வந்துள்ளார்கள். தங்களது தலைவர்கள் தொடர்ச்சியாக பொய் சொல்லி வந்துள்ளார்கள் என்றும், எவரையுமே நம்ப முடியாது என்றும் சொல்கின்ற ஒரு காலகட்டத்துக்கு வந்துள்ளார்கள். எனவே இதுவரை காலமும் தமிழ் மக்களைப் பற்றி தங்களது தலைவர்கள் கூறியதும் பொய் என்று உணரும் காலத்துக்குள் சிங்கள மக்கள் வந்துள்ளார்கள். ஐ.நா. மனிதவுரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறைபாடுகள் இருந்தாலும்கூட சர்வதேச சமூகம் கூறும் விடயத்தை பார்க்கவேண்டும். இங்கு நல்லிணக்கம் ஏற்படுமாக இருந்தால் இந்தத்தீவில் வாழும் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் எடுத்துள்ளார்கள்.

இவ்வாறான நிலையில், முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களது போராட்டம் நியாயமானது என்று யோசிக்கின்ற நிலையும் உருவாகியுள்ள சூழலில் 34 வருடங்களுக்கு முதலே நிராகரித்த ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 ஆவது திருத்தத்தை வலியுறுத்துவதா? அல்லது நிரந்தரமாக தமிழ் மக்களுடைய தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற சுயநிர்ணயத்துடன் கூடிய சமஷ்டித் தீர்வை வலியுறுத்துவதா? இது பற்றி எமது மக்கள் சிந்திக்க வேண்டும்.

**என்ன தேவை?**

தமிழ் மக்கள், சிங்கள மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும், உலகத்துக்கும் உண்மைகளை சொல்ல வேண்டியுள்ளது. எங்களது பாதிப்பை உறுதிப்படுத்த என்ன தேவையோ, அதனை நாட்டை பிரிக்காமல் அடையலாம் என்றால் அதற்கான உத்தரவாதத்தைக் கொடுத்து எமது இனப்பிரச்சினைக்கு தீர்வை எட்டுவதற்கு முயற்சி எடுக்கும் காலம் இது.

நாம் இன்று சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்தி எமக்கான தீர்வைப் பெற முயற்சிக்க வேண்டியிருப்பதுடன், பொருளாதாரம் சீரழிந்துள்ள நிலையில் புலம்பெயர் உறவுகளுடன் சேர்ந்து எமது பிரச்சினை தீர்க்கப்படும் போது உங்களது பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியும் என நாம் பேச வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இன்று இலங்கையை மையமாக கொண்டு பேரம் பேசும் முறை உருவாகியுள்ளது. சீனா, இந்தியா பூகோளப் போட்டியில் தமிழ்த் தலைவர்கள் இந்தியாவின் நலன் சார்ந்து அரசியலை முடக்க முயல்கிறார்கள்.

இலட்சக் கணக்கில் மக்கள் தமது உயிர்களை தியாகம் செய்தமை தங்களது உரிமைகளை அடைவதற்கும், தமிழ் தேசத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் சுயநிர்ணயத்தை அனுபவிப்பதற்குமே. செய்த தியாகங்களை மதித்து எம்மோடு சேர்ந்து நீங்கள் வந்திருப்பது மிகப்பெரும் நம்பிக்கையையும் பலத்தையும் கொடுத்திருக்கிறது. இந்தப் புரட்சி தொடர வேண்டும். இந்த விழிப்புணர்வு ஒவ்வொரு தமிழனின் காதிலும் விழ வேண்டும். நாங்கள் ஒற்றுமையாக ஒரு தேசமாக நின்று எமது உரிமைகளைப் பெற உறுதி பூணுவோம் - என்றார்.

**பேரணி**

ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிராகவும், சமஷ்டித் தீர்வை வலியுறுத்தியும் வவுனியா மாவட்ட செயலகத்துக்கு அருகாமையிலுள்ள பண்டாரவன்னியன் நினைவுச் சிலைக்கு முன்பாக நேற்று பி.ப. 2.30 மணிக்கு ஆரம்பித்த பேரணியானது, ஏ - 9 வீதியூடாக சென்று தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தை அடைந்து பொதுக்கூட்டத்துடன் நிறைவுற்றது.

சிவப்பு, மஞ்சள் கொடிகளுடன் 'ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டத்தை நீக்கி சமஷ்டித் தீர்வை நடைமுறைப்படுத்து, சர்வதேச விசாரணை வேண்டும், இனப்படுகொலைக்கு நீதி வேண்டும், இந்த மண் எங்களில் சொந்த மண், இராணுவமே வெளியேறு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு' உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டிருந்தனர். (அ-ஓ-1-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆண்டுகளாக 132 ஆசிரியர்களுக்கு யாழ். கல்வி வலயத்தில் இடமாற்றமில்லை

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தால் வெளிவந்தது உண்மை

**யாழ்ப்பாணம், மார்ச் 14**

**யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே பாடசாலையில் கடமை புரியும் 132 ஆசிரியர்களுக்கு இதுவரை இடமாற்றம் வழங்கப்படாமல் உள்ளமை தகவல் அறியும் சட்டம் ஊடாக அம்பலமாகியுள்ளது.**

வடக்கு மாகாண கல்வி அமைச்சு ஆசிரிய இடமாற்றத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் பல தரப்புக்களாலும் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே இந்தத் தகவல் வெளிவந்துள்ளது.

வெளி மாவட்டங்களில் 7ஆண்டுகளைத் தாண்டியும் பணிபுரியும் ஆசிரியர்கள் பலர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வரமுடியாமல் உள்ள நிலையில், 132 ஆசிரியர்கள் 10 ஆண்டுகளாக எந்தவொரு இடமாற்றமும் இன்றி யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் பணியாற்றி வருகின்றனர்.

இடைக்காடு மகா வித்தியாலயம், யாழ். இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் தலா ஏழு பேர் வரை இவ்வாறு 10 ஆண்டுகள் கடந்தும் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ- 20)

# குடியிருப்புக்களை நோக்கி யானைகள் படையெடுப்பு

## மக்கள் அச்சத்தில்

அம்பாறை, மார்ச் 14

சம்மாந்துறை, வீட்டுக் குடியிருப்புக் களை நோக்கி, காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளால், அந்தப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலையும் குடியிருப்புக் களுக்குள் புகுந்த யானைகள் வீட்டு மதில்கள், வாயிற்கதவுகள் மற்றும் விளைபயிர்களைச் சேதப்படுத்தியுள்ளன. வீடுகளில் தங்கியிருந்த மக்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பி யுள்ளனர்.

இதுதொடர்பில் கிராம அலுவலர் மற்றும் பொலிஸாரிடமும் முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-4-இ)

# நிபுணத்துவம் கொண்டவர்கள் பொருளாதாரச் சபையில் இல்லை

கொழும்பு, மார்ச் 14

நாட்டின் பொருளாதார நிலைமை நெருக்கடிகளைச் சந்தித்துள்ள நிலையில், நாட்டின் பொருளாதாரச் சபையில் நிபுணத்துவம் உடையோர் அங்கம் வகிக் காமையும் நெருக்கடிகளுக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படு கின்றது.

நாடு சுதந்திரத்தின் பின்னர் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத் துள்ள நிலையில், அவதியுறும் மக்களுக்குத் தீர்வுகளை வழங்கும் எந்தநடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இந்தவார ஆரம்பத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பொருளாதார முகாமைத்து வத்தினூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு ஒரு பொருளாதாரச் சபையை நியமித்திருந் தார்.

இந்தச்சபைக்கு ஜனாதிபதி தலைமை வகிக்கும் நிலையில் பிரதமர், பந்துல குணவர்தன, பஸில் ராஜபக்ச, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மகிந்தானந்த அளுத்கமே, ரமேஷ் பத்திரண மற்றும் மத்தியவங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் அங்கத்தவர்களாகவுள்ள னர்.

அது வாரமொரு முறை கூடுவதோடு அமைச்சுகளுக்கும் அரசாங்க திணைக்களங்களுக்கும் நிதி சம்பந்தமான இயைபுள்ள மதியுரையை வழங்கும் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சபையில் அமைச்சர்கள் மற்றும் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் அங்கம் வகிக்கின்ற போதும், பொருளியல் வல்லுநர்களும், சுயாதீன சிந்தனையாளர்களும் இடம்பெறவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-ரி1)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மார்ச் 14

கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம் நடத்தும், குருதிக்கொடை முகாம் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நிலையக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது. (ம-4-இ)




**சமையலாள் தேவை**

யாழ். நகரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் ஊழியர்கள் மூவருக்கு சமையல் செய்யக் கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
23/1, 4ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:
077 9592 628

**துரித பொதிகள் சேவை**

உள்நாடு வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகை
India : 1500/=
Australia : 1850/=
France : 1400/=
Germany : 1250/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, யாழ்ப்பாணம்.
0777 554528
(CS) (4/6)

**APPLY FOR STUDENT VISA – 2022**

1) Child education 5 – 17 years (both parent can go with children)
2) Student Visa with work
a. Canada & UK – IELTS (6 – 6.5)
b. Europe Countries (Germany, Swiss, Italy. France etc…) - No need to have an IELTS.
c. Australia family settled visa
Application now in process - Register now
Minimum qualifications – A/L or NVQ level 4 முடித்திருக்க வேண்டும்.
(CS 18777) (4/6)
For consultation: The Visa Consultant
Adiyapatham Road, Thirunelvely, Jaffna. - T.P: 0770385584 - Email Id: naltcjaffna@gmail.com

**பணியாளர் தேவை**




உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு அச்சு **இயந்திர இயக்குனர் (மெசின் மைன்டர்) பணியாளர் தேவை. பழக விரும்புபவர்களும்** விண்ணப்பிக்கலாம்.

ஆர்வம் உள்ளவர்கள் இன்று **(14.03.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப 06.00 மணிவரை** நேரில் சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


# மரண அறிவித்தல்

தோற்றம் 03.09.1956



மறைவு 11.03.2022

## திரு. கந்தசாமி மனோரஞ்சன்

**(இளைப்பாறிய அலுவலக உதவியாளர், யா/அத்தியார் இந்துக்கல்லூரி, யா/வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாலயம்)**

பழையவீதி கோப்பாய் தெற்கினைப் பிறப்பிடமாகவும் கிழுவானை ஒழுங்கை கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தசாமி மனோரஞ்சன் கடந்த (11.03.2022) அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாசிலாமணி பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மருமகனும், மனோரஞ்சினியின் பாசமிகுகணவரும் துஸ்யந்தினி, சுகந்தன்(லண்டன்), கிறிஸ்ரீன் (ஆசிரியை- யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வின்சன்ட்பேட்டன்(தபாலதிபர்- யாழ்ப்பாணம்), சோபிகா, புருசோத்தமன்( நியூசிறிநதியா நகைமாளிகை) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிறெடி(மாணவன்- ESOFT Metro Campus), நிறோய்(மாணவன்- பரியோவான் கல்லூரி),ஹனோஸ்கா, டிவேனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

***அன்னாரின் பூதவுடல் (14.03.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்திலிருந்து பி.ப 3.00மணியளவில் இலங்கை பெந்தேக்கோஸ்தே கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.*** இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்- குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.